# தங்கைக்கு



டாக்டர் மு. வரதராசன்

# தங்கைக்கு

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி



விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை – 1

ரு. 1 - 4 - 0

முதற் பதிப்பு : ஜனவரி 1953



சென்னை அரசாங்கத்தின் பரிசு பெற்ற நூல்கள் :

ஔவைச் செய்தி (இலக்கிய ஆராய்ச்சி)
அரசியல் அலைகள் (கட்டுரைகள்)
கள்ளோ? காவியமோ? (புனைகதை)

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றவை :

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கைவிளக்கம் (ஆராய்ச்சி)
மொழிநூல் (ஆராய்ச்சி)
விடுதலையா? (சிறுகதைகள்)

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை – 14

# முன்னுரை

பழமைக்கும் புதுமைக்கும் போர்; கடமைக்கும் உரிமைக்கும் முரண்பாடு; கற்புக்கும் காதலுக்கும் மாறுபாடு; கொள்கைக்கும் நடக்கைக்கும் வேறுபாடு; குடும்பத்திற்கும் உலகிற்கும் போராட்டம்: இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் பொதுவாக வாழ்க்கை தாக்குண்டு நலிவுறுகின்றது; சிறப்பாகப் பெண்ணுள்ளம் சிதைவுறுகின்றது. எது எங்கே எவ்வாறு என ஒவ்வொரு துறையிலும் ஆய்ந்து தெளியாமையும், தெளிந்தவரின் நெறியை நம்பாமையுமே காரணம் எனலாம். நெறியில் தெளிவும் நம்பிக்கையும் ஏற்பட்டால் நலிவுக்கும் சிதைவுக்கும் இடம்தராமல் வாழ்வைக் காத்துக்கொள்ள முடியும்; 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' முடியும். இதையே இந்தக் கற்பனைக் கடிதங்கள் அறிவுறுத்துகின்றன.

மு. வ.

# 1

அன்புள்ள தங்கை,

உன் புதிய வாழ்க்கை நல்லபடியே நடந்துவருகிறது என்று அம்மாவும் அப்பாவும் வந்து சொன்னது கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். எனக்கு உன்னைப் பற்றி நம்பிக்கை உண்டு. இளமையிலிருந்தே நீ அறிவும் திறமையும் அன்பும் பணிவும் உள்ள பெண்ணாக விளங்கியதைக் கண்டிருக்கிறேன் அல்லவா? அவற்றைக் கண்டிருப்பதால், உன் எதிர்காலம் நல்லபடி விளங்கும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. ஆயினும் சில்லறைப் பிடிவாதமும் குறும்பும் கொண்டு நீ வீட்டில் தொல்லை கொடுத்த நாட்களையும் நான் மறக்கவில்லை. அப்போதெல்லாம் அம்மா உன்னைக் கடிந்து சொன்ன சொற்களும் வைது உரைத்த உரைகளும் நான் கேட்டிருக்கிறேன் அல்லவா? அவற்றை உரைத்த அன்னையின் வாயால் இன்று உன் இல்வாழ்க்கையைப் பற்றிப் புகழுரைகளும் கேட்கின்றேன் என்றால், நான் பெருமை கொள்ளாதிருக்க முடியுமா? அழகிலும் திறமையிலும் பெயர் பெற்ற என் தங்கை, இன்று தன் புதிய வாழ்க்கையில் அன்பும் பணிவும் அணிகலன்களாகப் பூண்டு விளங்குகின்றாள் என்று கேள்வியுற்று என் உள்ளம் பெருமிதம் கொண்டது. வாழ்க உன் நற்பண்புகள்!

இவ்வாறு உவகை நிறைந்த உள்ளத்தோடுதான் பின் வரும் அறிவுரைகளை எழுதுகின்றேன். அறிவுரைகள்

எழுதுவதைக் கண்டதும், உன்னிடத்தில் ஏதோ குறை கண்டு எழுதினேன் என்றோ, கேள்விப்பட்டு எழுதினேன் என்றோ எண்ணிவிட வேண்டாம். குறை இருந்தால்தான் அறிவுரை கூறவேண்டும் என்பதில்லை. குறை நேராமலிருக்க வேண்டும் என்று அறிவுரை கூறவேண்டும் அல்லவா? அந்த வகையில்தான் என் கடமையைச் செய்ய முன்வருகின்றேன். எத்தனையோ படிக்கின்றாய்; கேட்கின்றாய். இவற்றையும் படி; கேட்டுக்கொள். ஓய்வு இருக்கும்போது எண்ணிப்பார். அமைதியான உன் வாழ்க்கையை மட்டும் எண்ணுவது போதாது. உன்போல் இந்த நாட்டில் பிறந்து எத்தனையோ இடர்களுக்கும் சிக்கல்களுக்கும் ஆளாகியுள்ள மற்றப் பெண்களின் வாழ்க்கையையும் எண்ணிப்பார். ஒரு செம்மறியாடு முன்னே சென்று இடர்ப்பட்டால், பின்னே வரும் ஆடுகள் அதனைக் கண்டு ஒன்றும் திருந்துவதில்லை; பயனடைவதில்லை. முன்னே சென்றது விழுந்த பள்ளத்திலேயே எல்லாம் சென்று விழுமாம். மனிதராகிய நாம் ஏன் அப்படி விழவேண்டும்? ஆகையால் மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைகளையும் அவற்றின் காரணங்களையும் எண்ணிப் பார்ப்பது, நம்மை நாம் காத்துக்கொள்வதற்கு மிகவும் பயன்படும். உண்மையாக ஆராய்ந்தால், இப்படி நேரே வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி. இவ்வாறு வாழ்க்கையை நேரே கற்பதற்குப் பயன்படும் காரணத்தால்தான், "பெரியோர்களின் வாழ்க்கைவரலாறுகளைப் படி, உயர்ந்த புலவர்களின் காவியங்களைப் படி, சிறந்த உணர்வினர் எழுதிய கதைகளைப் படி" என்று உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இனிமேல் அவற்றை விடாமல் படி என்று வற்புறுத்துகிறேன். அதனால் விளையும் நன்மைகள் எவ்வளவோ உண்டு. நம்மை அறியாமலே நம் மனம் அந்தப் பெரியோர்கள்

நடந்த நெறியில் ஈடுபட்டு நடக்கும். நம்மை அறியாமலே நம் வாழ்க்கை செம்மையாக அமைந்துவிடும்.

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி; பல முறை படி; என்றும் படி. குயூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரிபாகாந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி. இவை போன்றவற்றை மேன் மேலும் படித்துக்கொண்டிரு.

நல்லவர்நட்பு வளர்பிறை போல் வளரும் என்கின்றார் திருவள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர் பிறை போல் வளர வேண்டும் என்று விரும்புகின்றேன். அது என் வாழ்த்துதலில் இல்லை; நீங்கள் வாழும் முறை யில் இருக்கிறது.

நட்புக்காகப் பெரியோர் சொன்ன அத்தனையும் கணவன்மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும். நாலடியா ரில் ஒரு பாட்டுப் படித்திருக்கிறேன். அதில் தக்காரின் நட்பு ஒரு கரும்பைக் குருத்திலிருந்து அடிவரையில் தின் ருற் போன்றது என்று கூறப்பட்டிருக்கிறது; அதாவது, வர வர இனிமை மிகுந்துகொண்டு போகுமாம். ஆனால் தகாதவரின் நட்பு நேர்மாருக இனிமை குறைந்துகொண்டு போகுமாம்; அடிக் கரும்பை முதலில் கடித்துத் தின்று குருத்துவரையில் தின்பது போன்றதாம். காரணம் என்ன? அவரவர் பண்புதான். அதுபோல் நீங்கள் நல்ல பண்பு உடையவர்களாக விளங்கினுல், கோலெடுத்து ஊன்றும் கிழவனும் கிழவியுமாக முதுமையுற்ற காலத்தி லும் உங்கள் அன்பின் சிறப்பு வளர்ந்துகொண்டே போகும். ஆகவே நல்லபண்பை வளர்ப்பதுதான் – வளர்ந் துள்ள நல்ல பண்பைக் காப்பதுதான் – உங்கள் கடமை என்பதை நன்ருக உணர்ந்துகொள்.

புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்ருகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை; திறமை

இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்துகொள்வார். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக்கொடுப்பார். புதிய வியாபாரி நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை. இந்தப் புதுமையை எள்ளி நகை யாடுவது போல் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்கு தெரியும். புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும் என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும், கருத்து உடையதுதான். அதற்கு மாறாக, எவ்வளவு பழமை ஆனபோதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளி விடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை என்று சொல்வேன். இக்காலத்துப் பலருடைய வாழ்க்கை பொன்முலாம் பூசிய பொருள்போல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளி வீசு கின்றது. பழமைப்பட்டுத் தேயத் தேய, ஒளி இழந்து மங்குகின்றது. உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் ஒரு நாளும் அப்படி ஆகாது அல்லவா? பழகப் பழக, தேயத் தேய, அது குன்றா ஒளி வீசும் அல்லவா? அதுபோல் வாழும் வாழ்க்கையே நல்லவர்களின் குறிக் கோளாக இருக்க வேண்டும்.

பழமைப்பட்ட பிறகும் விளங்குவதுதான் சிறந்த நட்பு என்னும் கருத்தோடு திருவள்ளுவர் நட்பைப் பற்றி யும் நட்பாராய்தலைப் பற்றியும் பத்துப் பத்துக் குறளால் விளக்கிய பிறகு, பழைமை என்று தனியே ஒரு பகுதி கூறுவதை நீ போற்றிக் கவனிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் சிறப்பில்லாத தீ நட்பு, கூடா நட்பு என்பவை களைப் பற்றி அவர் விளக்குகின்றார். பழமைப்பட்ட பிறகும் மாசின்றி விளங்கும் நட்பை அவர் “அன்பின் வழிவந்த கேண்மை” என்ற அழகான தொடரால் குறிப்பிடுகின்றார். அந்தத் தொடரை நினைக்கும்போதும்

சொல்லும்போதும் - கேட்கும்போதும் திருவள்ளுவரின் தமிழ் – அனுபவ அறிவிலிருந்து மலர்ந்த அந்த அறிவுரைத் தமிழ் – என் நெஞ்சில் இனிக்கின்றது.

உன் கணவரைப் பற்றி எனக்குப் போதிய அளவு தெரியாது. உன்னைப் பற்றி நன்றாகத் தெரியும். ஆகையால் உனக்குத்தான் அறிவுரை சொல்ல என்னால் முடியும். என் அறிவுரை வாழ்த்துரை இரண்டும் ஒன்றுதான். உங்கள் வாழ்க்கை "அன்பின் வழிவந்த கேண்மை"யாக விளங்குவதாக.

உன் அன்புள்ள அண்ணன்,

வளவன்.

## 2

அன்புள்ள தங்கை,

தம்பிக்கு எழுதுவதுபோல் உனக்கு நீண்ட கடிதங்கள் எழுத நான் எண்ணியதில்லை. ஆனால் அத்தகைய கடிதங்களை எழுதும்படியாக நீயே செய்துவிட்டாய்.

"பொதுவான அறிவுரைகள் கூறுவதில் பயனில்லை. உங்கள் வாழ்க்கையிலிருந்தும் உங்கள் நண்பர்களின் வாழ்க்கையிலிருந்தும் நீங்கள் பெற்ற அனுபவங்களைத் தெரிவியுங்கள்" என்று எழுதியிருக்கிறாய். வாழ்க்கையில் வரக் கூடிய சிக்கல்களைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறாய். இவ்வாறு நீ எனக்கு எழுதிய கடிதம் உன்னுடைய முற்போக்கைத் தெரிவிக்கிறது; நீ கண் மூடியாய் நில்லாமல் கண் திறந்து வாழ விரும்புவதைக் காட்டுகிறது; செம்மறியாடாகச் செல்லாமல் சிந்தனைப் பிறவியாக வளர்வதைப் புலப்படுத்துகிறது. கடிதம் எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்துள்ளது. உங்கள் இல் வாழ்க்கையைப் பற்றி அம்மா என்னிடம் சொன்னபோது உண்டான மகிழ்ச்சியைவிட இப்போது பெரிய மகிழ்ச்சி அடைகின்றேன்.

பழங்காலப் பெண்களைப்போல் அடங்கி நடப்பது நல்லதா, இக்காலத்துப் பெண்களைப்போல் உரிமையுணர்ச்சி யோடு வாழ்வது நல்லதா என்று கேட்டிருக்கிறாய். எனக்கு விடை சொல்லத் தெரியும். ஆனால் எப்படி எழுதுவது, என்ன எழுதுவது என்று எண்ணும்போது தயங்குகிறேன். எவ்வளவோ எழுதவேண்டும் என்று விரிவான பல எண்ணங்களும் எழுகின்றன.

சிறுவர்களுக்கு, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று தனித்தனியே பிரித்துப் பார்த்தே அறிவு வளர்

கின்றது. பசி உணவு இந்த இரண்டும் ஒன்றற்கொன்று நேர்மாறானவை என்று எண்ணிவிடுகிறார்கள். அதனால், பசி எடுப்பது நல்லதா, வயிறாரச் சாப்பிடுவது நல்லதா என்று உடனே கேட்டுவிடுகிறார்கள். உன் கேள்வியும் ஏறக்குறைய அதேபோல்தான் உள்ளது.

விடை சொல்லட்டுமா? இரண்டும் நல்லவைகளே. அடங்கியும் நடக்க வேண்டும். உரிமையோடும் வாழ வேண்டும்.

இதைப் படித்ததும் நீ என்னைப் பற்றி என்னவோ எண்ணுவாய். ஆனால் உண்மை இதுதான். பசி எடுக்கின்ற வயிறு உள்ளவர்கள்தான், வயிறாரச் சாப்பிட முடியும். அடங்கி நடக்கின்றவர்கள்தான் உரிமையின் நன்மையை அனுபவிக்க முடியும்.

பசிக்கு மாறானது பசி எடுக்காத மந்த நிலை. வயிறார உண்பதற்கு மாறானது செரிக்கும் ஆற்றல் இல்லாத நிலை. ஆனால் பசியும் உணவும் நேர்மாறானவை அல்ல. பசித்தால்தான் நன்றாக உண்ண முடியும்.

அடங்கி நடக்கலாம். ஆனால் பிறருடைய அடக்குமுறைக்கு அஞ்சி இரையாகக் கூடாது; நாமே அன்புள்ளவர்களின் அன்புக்கு அடங்கி நடக்கலாம். உரிமை வாழ்க்கை நடத்தலாம். ஆனால் மனம் போன போக்காய் வாழக் கூடாது; கடமையை ஒழுங்காய்ச் செய்து உரிமையைக் காத்துக்கொள்ளலாம்.

இன்று பலர் தெளிவு இல்லாத கல்வியால் தவறாக எண்ணுகிறார்கள். தான்தோன்றித்தனத்தை உரிமை என்று கருதிக் கெடுகிறார்கள். விட்டுக்கொடுத்து இணங்கி நடப்பதை அடிமைத்தனம் என்று இகழ்கிறார்கள்.

என் நெடுங்கால அனுபவத்தின் பயனாக நான் தெரிந்துகொண்ட உண்மையை எழுதுகின்றேன். கடமைகளை ஒழுங்காகச் செய்கின்றவர்கள் மட்டுமே உரிமையை

அனுபவிக்க முடியும். மற்றவர்கள் பிறர்உரிமையில் தலையிட்டுக் கெடுத்து இறுதியில் தம் உரிமையையும் இழந்துவிடுவார்கள். ஆகையால் உரிமையை முதலில் வைத்து நடக்கும் நெறி இடர்ப்பாடானது என்றே சொல்வேன். அன்பை முதலில் வைத்து, உரிமையை இரண்டாவதாக வைத்து நடப்பது எளிய நெறியாகும்.

இது இந்த நாட்டு மக்கள் மட்டும் கண்ட நெறி என்று எண்ணாதே. மேற்கு நாட்டு அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப்பார். அவர்கள் எழுதியுள்ள கதைகளையும் நாடகங்களையும் ஆராய்ந்துபார். உரிமைக்குப் பெயர் பெற்ற அந்த நாடுகளிலும் நான் சொல்லும் உண்மை விளங்குவதை உணரலாம்.

இன்னொரு தவறு உள்ளது. இப்படிப் பெண்களுக்குச் சொல்லி ஏமாற்றி ஆண்கள் மட்டும் உரிமையோடு வாழப் பார்க்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மை அல்ல. நல்ல குடும்பங்களாக வாழ்கின்றவர்களிடையே நான் பார்த்துவருகிறேன். மனைவி கணவனுக்கு விட்டுக்கொடுத்து வாழ்வது போலவே, கணவனும் பலவகையில் மனைவிக்கு விட்டுக்கொடுத்து வாழ்க்கை நடத்துகிறான். இளமையில் இல்வாழ்க்கையின் தொடக்கத்தில் ஆணின் அடக்குமுறை காணப்படும் குடும்பங்களிலும், வர வர அது குறைந்து அன்புவாழ்க்கையே வளர்கின்றது. கணவனுக்கு வயது ஆக ஆக அவன் மனைவிக்கு விட்டுக்கொடுப்பதே மிகுதியாகக் காண்கின்றேன். நெடுங்கால அனுபவத்திற்குப் பிறகு அவன் கற்றுக்கொண்ட பாடம் இது என்று தோன்றுகிறது.

அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நட, உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்காதே என்று நான் சொல்வேனானால், அது உனக்கும் உன்னைப் போன்ற பெண்களுக்கும் மட்டும் சொல்லும் அறிவுரை என்று எண்ணாதே.

என்னுடன் பழகும் நண்பர்களான ஆண்கள் பலர்க்கு இதையே நான் சொல்லியிருக்கிறேன். 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்னும் நாலடியாரின் பொன்மொழி இல்வாழ்க்கையின் மந்திரமாக விளங்க வேண்டும்; ஒரு வேளை கணவனும் இன்னொரு வேளை மனைவியுமாக விட்டுக் கொடுத்தால்தான் வாழ்க்கை எளிதாக நடக்கும்.

என்னுடன் படித்த கனகா — பக்கத்துத் தெரு வழக்கறிஞர் மகள் கனகாவைப் பற்றி உனக்கு நினைவு இருக்கும் என நம்புகின்றேன். எங்களோடு படித்துவந்த அந்தக் காலத்திலேயே அவள் உரிமை மிகுந்த பெண்ணாக இருந்தாள். குடும்பத்தாரும் அப்படியே வளர்த்துவந்தார்கள். அவளுடைய வாழ்க்கை என்ன ஆயிற்று, தெரியுமா? அவள் தாய்வீட்டில் வாழ்கிறாள்; கணவன் தனியே மனம் போன போக்காய்க் காலம் கழிக்கிறான். கனகா இனிமேல் பி. டி. படித்து ஆசிரியர்தொழிலுக்குப் போக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவளுடைய வாழ்க்கை இப்படி ஆனதற்கு என்ன காரணம் சொல்கிறாய்? அவளுக்கு அழகு, அறிவு, முற்போக்கு, திறமை எல்லாம் இருக்கின்றன. விட்டுக்கொடுத்தல் என்ற ஒன்றுமட்டும் இல்லை. அவளுடைய கணவனைப் பற்றி எனக்கு நேரே ஒன்றும் தெரியாது. அந்த ஊரான் ஒருவனோடு நெருங்கிப் பழகிக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவனும் அறிவு திறமை எல்லாம் உடையவனாம். ஆளைப் பார்த்திருக்கிறேன். அழகான தோற்றமும் உண்டு. இவ்வாறு இருந்தும் இருவரும் வாழத் தெரியாதவர்கள் ஆகிவிட்டார்கள். இனி என்ன செய்வது? இனிமேல் இவர்களின் மனத்தில் அன்பும் காதலும் வளர்வது அருமை. மனம் அப்படிப்பட்டது. ஒருமுறை பிளந்து நின்றபிறகு, வெறுப்பையும் பகையையுமே மனம் வளர்த்துக்கொள்ளும். எதைக் கண்டாலும் எதைக் கேள்விப்பட்டாலும், அவற்றை எல்லாம் வெறுப்

புக்கும் பகைக்குமே எருவாக்கிக்கொள்வார்கள். இந்த வாழ்க்கையைப் பற்றி நான் பல நாள் எண்ணியது உண்டு. இருவருமே உரிமையை முன்னே வைத்துப் போராடுகின்றவர்கள் என்பது என் கருத்து. கனகாவைப் போன்ற பெண்கள் பலர் இருக்கிறார்கள். கனகாவின் கணவனைப் போன்ற ஆண்களும் பலர் இருக்கிறார்கள். அந்தக் குடும்பங்கள் எப்படியோ அமைதியாக நடந்துகொண்டிருக்கின்றன. காரணம், அந்தக் குடும்பங்களில் பெண் இப்படி இருந்தால் ஆண் விட்டுக்கொடுப்பவனாக இருக்கிறான்; ஆண் இப்படி இருந்தால் பெண் விட்டுக்கொடுப்பவளாக இருக்கிறாள். உரிமைவெறி மிகுந்த பெண்ணோ ஆணோ, நாளடைவில் பழகிப் பழகித் தம் உரிமைவெறியைக் குறைத்துக்கொள்கிறார்கள். தீயும் நீரும் உறவுகொண்டு ஒன்றை ஒன்று குறைப்பது போல் ஆகின்றது இவர்களின் வாழ்க்கை. ஆனால் கனகாவும் கனகாவின் கணவனும் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கை, தீயும் தீயும் உறவு கொண்டு பெருந்தீ ஆகிய கதை என்று கருதுகின்றேன். இவர்கள் திருமணமான தொடக்கத்தில் மிகவும் அன்பாக வாழ்க்கையைத் தொடங்கியிருப்பார்கள். இதில் எள்ளளவும் ஐயுற வேண்டாம். ஒரே வீட்டில் பல மாதம் கூடி வாழவேண்டி ஏற்பட்ட பிறகுதான் வெறுப்பு வளர்ந்திருக்கும். அதற்குப் பிறகுதான் உரிமைப் போராட்டம் தலையெடுத்து வம்பு செய்திருக்கும்.

ரயிலில் பயணம் செய்யும்போது பக்கத்தில் உள்ளவர்களோடு எவ்வளவோ இணங்கி அன்பாக நடக்கிறோம். புதுமையான சில மணிநேரப் பழக்கம் ஆகையால் அப்படி நடக்கிறோம். அவர்களின் பண்புகளும் கருத்துக்களும் நமக்கு நேர்மாறானவைகளாக இருந்தபோதிலும் சிலமணி நேரப் பழக்கம்தானே என்று அன்போடு இணங்கி நடக்கிறோம். பல நாள் பழக நேர்ந்தால் அப்படி நடக்கமாட்-

டோம். அப்போது வெறுப்பும் பகையும் தலைகாட்டும். கனகாவும் அவளுடைய கணவனும் திருமணம் ஆகாமலே காதலர்களாகப் பழகுவதாக இருந்தால் இன்னும் நெடுங் காலம் அன்போடு வாழ்ந்திருப்பார்கள். திருமணம் ஆகி யிருந்தாலும், ஒரே வீட்டில் ஒரே ஊரில் வாழாமல் தனித் தனியே தொழில் செய்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து விடுமுறை நாட்களில் மட்டும் கூடிப் பழகும் நிலைமை இருந் திருந்தால், அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் அன்போடு காலம் கழித்திருக்க முடியும். எதிர்காலத்தில் படித்தவர் கள் பலருடைய வாழ்க்கை அப்படித்தான் கழியும் என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறவர் களுக்கு என்னுடைய இந்த அறிவுரை வேண்டியதில்லை. நானும் நீயும் சொல்லாமலே அவர்கள் ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்கொடுத்து நடப்பார்கள். பிரிந்து பிரிந்து குறைந்த நேரம் பழகுகின்றவர்கள் இயற்கையாகவே விட்டுக் கொடுத்து அன்போடு பழகுகின்றார்கள். பழக்கம் ஒரே இடத்தில் நின்று நீட்டிக்கும்போதுதான், ஒருவர்குறை மற்றொருவர்க்குத் தெரிகிறது ; பிறகு வெறுப்பு வளர்கின் றது ; அதன்பிறகு உரிமைப் போராட்டம் எழுகின்றது.

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்று ஒரு பழ மொழியை முதல்முதலில் அமைத்தார்களே, அவர்கள் வாயில் சர்க்கரை இடவேண்டும். எவ்வளவு பெரிய உண்மையை எவ்வளவு எளிதாகச் சொல்லிவிட்டார்கள் ! இதில் பாலின்மேல் வைத்து விளக்கிய உண்மையையே, பழைய சங்கப்பாட்டு ஒன்றில் தேனின்மேல் வைத்து, "ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்" என்று சொல்லி யிருக்கிறார்கள். இந்தப் பாட்டைப் பாடிய புலவர், குடும்பவாழ்க்கையில் வரும் சிக்கலைக் குறித்தே பாடியிருக் கிறார். கணவன் வேறொருத்தியை நாடுவதை அறிந்து மனைவி மனம் நொந்து வருந்தும் நிலையில், அவன் வீட்

டிற்குத் திரும்பிவரும் வேளையில், மனைவிக்கு உயிர்த்தோழியாக உள்ள ஒருத்தி அவனுக்கு அறிவுரை கூறுவதாகப் பாடியுள்ளார். “ அய்யா ! காதல்வாழ்வின் தொடக்கத்தில் எவ்வளவு அன்போடு உனக்கு உதவி செய்தோம். அப்படிப்பட்ட அன்பை மறந்துவிட்டு, நீ இப்போது இவ்வாறு நடக்கிறாய். விடாமல் பருகுவோர்வாயில் தேனும் புளிக்கும் என்பது பொருத்தமாக உள்ளது. அப்படி வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு நீ எம்மை விட்டு நீங்குவதானால், தாய்வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. பிறகு உன் விருப்பம்போல் நட ” என்று தோழி அவனிடம் சொல்கின்றாள். பலமுறை எண்ணிப்பார்த்து, மனத்தின் இயல்பை உணர்வதற்குத் துணை செய்யும் பாட்டு இது.

இதைப் பற்றி எழுதும்போது, எனக்கு மற்றொரு நல்ல நினைவும் வருகின்றது. தமிழ் இலக்கியத்தில் தோழி என்று வரும் இவளுடைய திறமை போற்றத்தக்கதாக உள்ளது. காதலர் இருவர் நெருங்கி உறவு கொள்வதற்குக் காரணமாக விளங்கும் இவள், அவர்களை எத்தனை முறை எத்தனைக் காரணங்களால் பிரிக்க முயல்கிறாள், தெரியுமா ? அவர்களைப் பிரித்து அடியோடு ஒதுக்கிவிட வேண்டும் என்பது அவள் நோக்கமா ? இல்லை. தடை இல்லாமல் இடர் இல்லாமல் கூடிப் பழகினால் வாழ்க்கை சுவைக்காமல் போய்விடுமே என்று அஞ்சி, அடிக்கடி ஒருவரை ஒருவர் காணாதபடி இடையிடையே பிரித்துவைக்கின்றாள். அவ்வாறு செய்வதால், காணவேண்டும் என்று ஏங்கும்படியான நிலைமையை உண்டாக்கி, அந்த ஏக்கத்தால் காதல் வளரும்படியாகச் செய்கின்றாள். அவள் மனத்தின் தன்மையை நன்றாக உணர்ந்தவள் என்று கூற வேண்டும்.

நம் நாட்டில் திருமணமான தொடக்கத்தில் மனைவி கணவனோடு இருக்கக்கூடாது என்று பிரிக்கும் வழக்கம்

ஒன்று இருந்துவருகிறது. அதுவும் இவ்வகையான நன்மைக்கே என்று எண்ணுகிறேன். அறிஞர் எச். ஜி. வெல்ஸ் வாழ்க்கையில் ஒரு குறிப்பு – அவரே எழுதிய குறிப்பு – ஒன்று என் நினைவுக்கு வருகிறது. அவருடைய இரண்டாம் மனைவி ஒரு முறை வாழ்க்கையில் மிகச் சலித்தபோது, கணவருக்குச் சொல்லி அனுமதி பெற்றுத் தனியே பிரிந்து சில வாரங்கள் வாழ்ந்தாராம். அப்போது சென்று தங்கியிருந்த இடத்தையும் கணவருக்குத் தெரிவிக்கவில்லையாம்.

பழகி வாழும் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதையும் மனம் எப்படிப்பட்டது என்பதையும் இவைகளிலிருந்து நீ எண்ணிப்பார். கணவன் மனைவி என இருவர் ஓரிடத்தில் நிலையாகப் பழகி வாழும் வாழ்க்கை இப்படிப்பட்டது என்றால், அதில் உரிமையை முதலில் வைத்து நடப்பவர் தொல்லைப்படுவதைக் கேட்கவேண்டுமா ?

அதனால் உரிமையை இழந்துவிட வேண்டும் என்று நான் கூறவில்லை. அது முதலில் வேண்டாம் என்பதே நான் கூறுவது. அன்போடு கடமையைச் செய்தல் முதலில் இருக்கவேண்டும். அப்படி இருந்தால், மனத்தின் பேயாட்டத்திற்கு இடம் இருக்காது. தவற வாய்ப்பு நேராது ; நேர்ந்தாலும் விழிப்போடு தற்காப்புத் தேடிக்கொள்ளலாம்.

இல்வாழ்க்கைக்கு மட்டும் இந்த அறிவுரை என்று எண்ண வேண்டியதில்லை. நீ அங்கே யாரேனும் ஒரு பெண்ணோடு நட்புக்கொண்டு நெருங்கிப் பழகும்போதும், நட்பு நீடிக்க வேண்டுமானால் இதுதான் வழி. நான் இந்த விதியைப் போற்றி நடப்பதால்தான் நண்பர் அருளப்பரோடு இளமைமுதல் இன்றுவரையில் தொடர்ந்து நண்பனாக இருந்துவர முடிகின்றது ; இனியும் அவ்வாறே இருந்து வர முடியும்.

உனக்கு ஒரு பழக்கம் இருந்தால் நல்லது. அப்போது இந்த உண்மைகள் தெளிவாக விளங்கும். அது என்ன

பழக்கம், தெரியுமா? மூன்ளும் வீட்டுக் குடும்பச் சண்டையைப் பற்று இல்லாமல், உணர்ச்சி இல்லாமல் அமைதியாக நீ பார்க்க முடியும் அல்லவா? அதுபோலவே, உன் மனத்தின் போக்கையும் நீ வேடிக்கை பார்ப்பதுபோல் பார்த்துப் பழக வேண்டும். மனம் எப்படி வெறிகொண்டு எழுகிறது, எப்படி யாரைத் தாக்குகிறது, பிறகு எப்படி அலைகிறது, எப்படி அமைதி அடைகிறது என்பவற்றை அமைதியாக எண்ணிப்பார். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்வேன். கோபம் வருகிறது; பிறகு தணிகிறது. கோபத்தில் நண்பனைக் கண்டபடி பேசுகிறேன். கோபம் தணிந்தபிறகு, நண்பனை அவ்வாறு கடிந்தது தவறு என்று ஓர் எண்ணம் மெல்லத் தோன்றுகிறது. நண்பனிடம் சென்று மன்னிப்புக் கோரலாமா என்று தோன்றுகிறது. ஆனல் உடனே மற்ருேர் எண்ணம் அதைத் தடுத்துவிடுகிறது. "நாம் என்ன செய்துவிட்டோம்? அவன் இப்படிக் கேட்டதால்தானே நான் கோபித்துக்கொண்டேன். இதற்காக மன்னிப்புக் கோர வேண்டுமா? மானம் இல்லையா? கூடாது" என்று அந்த எண்ணம் தடுக்கிறது. ஒரு மனம் அன்போடு பணிந்துபோக முனைகிறது; மற்ருெரு மனம் ஆணவத்தோடு இணங்காமல் நிற்கிறது.

இப்படிப்பட்ட நெருக்கடியில் நாம் என்ன செய்ய வேண்டும், தெரியுமா? அன்புமனத்தை ஆதரிக்க வேண்டும். ஆணவமனத்தைக் கைவிட வேண்டும்.

மனிதரிடம் இப்படி இருவகை மனநிலையும் இருந்து வருகின்றன. அன்புமனத்தைத் தெய்வமனம் என்றும், ஆணவமனத்தை விலங்குமனம் என்றும் கூறவேண்டும். நாம் எப்போதும் தெய்வமனம் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். முதலில் விலங்குமனம் வல்லமையோடிருந்து தடுக்கும். "ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும்? விட்டுக் கொடுப்பது கோழைத்தன்மை, தோல்வி மனப்பான்மை.

ஆகையால் விட்டுக்கொடுக்காமல் போராடு" என்று விலங்குமனம் தொடக்கத்தில் வற்புறுத்தும். அதன் பேச்சைக் கேளாமல் புறக்கணித்துப் பழகிவிட்டால், நாளடைவில் அதன் முனைப்பு அடங்கிவிடும்.

நண்பர்களின் பழக்கத்திலேயே இவ்வளவு போராட்டம் என்றால், ஒரே வீட்டில் இருந்து வாழ்நாள் முழுதும் பழகுவதற்கென்று அமைந்த இல்வாழ்க்கையில், உரிமை உரிமை என்று மனம் போன போக்காய் விட்டால் என்ன ஆகும்? முன்னே குறித்தபடி யாராவது ஒருவர் முழு அடிமையானால் தவிர, இருவர் கூடி இல்வாழ்க்கை நடத்த முடியாது என்று கூறவேண்டும். உரிமைக்கு முதல் இடம் கொடுக்காமல் அன்புக்கு விட்டுக்கொடுத்து வாழக் கற்றுக் கொண்டால், யாரும் அடிமையாகாமலே வாழ்க்கை நடத்த முடியுமே.

இப்படிப்பட்ட வாழ்க்கையில் 'பிகு' என்ற சொல்லப் படும் வேடிக்கைப் பிடிவாதம் இருக்குமே தவிர, வெறுத்துப் பிரிவதற்குக் காரணமான விலங்குப் பிடிவாதம் இருக்காது. இவர்களிடையில்தான் நாளடைவில் உரிமையின் சிறப்பும் விளங்கும்.

எந்த வாழ்க்கையிலும் சிறு சிறு பூசல் வரலாம்; போகலாம். அவைகளுக்கு நிலையான இடம் தரக்கூடாது. சிறு பூசல் காரணமாகக் கணவனும் மனைவியும் பேசாமல் சிலமணி நேரம் இருக்க நேரலாம். ஆனால் அடுத்தபடி அன்போடு பேசுவதற்கு வாய்ப்பை எதிர்பார்த்திருக்க வேண்டும். வலியச் சென்று பேசுவதற்கு நல்ல மனம் தூண்டவேண்டும். அவ்வாறு வலியப் பேசி விட்டுக்கொடுத்தவர் தோற்றுவிட்டவர் அல்ல; அவர்தான் அன்பு வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் என்கின்றார் திருவள்ளுவர். "ஊடலில் தோற்றவர் வென்றார்" என்னும் அவருடைய கருத்து எவ்வளவு உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையாகப்

பிறந்திருக்கிறது! அத்தகைய பண்பாடு இல்லாதபோது அறிவு எவ்வளவு கூர்மையாக இருந்தபோதிலும் என்ன பயன்? பண்பாடு இல்லாத அறிவு நமக்கு உதவாது; நம்மைக் கெடுக்கவும் கெடுக்கும். அது எதற்கும் காரணம் சொல்லும்; சிறிய குற்றத்தைப் பெரிய குறையாக்கிக் காட்டும்; பெரிய குணத்தையும் சிறிதாக்கி மறக்கச் செய்யும். பண்பாடு இல்லாதபோது அத்தகைய அறிவால் பயன் என்ன? அது நம்பத் தகாதது.

மற்றவை பிறகு எழுதுவேன். நீயும் உன் கருத்துக்களைத் தயங்காமல் எழுது. நல்ல முயற்சிக்குத் தயக்கம் ஏன்?

உன் அண்ணன்,

வளவன்.

# 3

அன்புள்ள தங்கை,

முன்னோரின் வாழ்க்கையைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டிருக்கிறாய். முன்னோரின் வாழ்க்கையைக் கண்மூடிப் பின்பற்றி நடக்கவேண்டும் என்று நான் எப்போதும் சொல்லமாட்டேன். காலம் மாறிவிட்டது; கால மாறுதலுக்கு ஏற்பச் சூழ்நிலையும் வாழ்க்கையும் மாறி அமைந்துள்ளன. அவற்றை உணராமல் பழையபடியே வாழ விரும்புதல் அறியாமை. பழமையில் நல்லவை எவை? வாழ்க்கைக்கு அடிப்படையானவை எவை? என்றும் பின்பற்றத் தக்கனவாக உள்ளவை எவை? இவ்வாறு ஆராய்ந்து, இன்றியமையாத நல்லவற்றை மட்டும் போற்றினால் போதும்.

முன்னோர் எல்லோர்க்கும் அடிமையுணர்ச்சியே இருந்தது என்று கூறமுடியாது. அவர்களில் பலர்க்கு உரிமையுணர்ச்சி இருந்தது. பெண்கள் எல்லோரும் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள் என்றும் கூறமுடியாது. சங்க இலக்கியம், பெண்கள் பலர் உரிமையோடு வாழ்ந்த நிலைமையைத் தெரிவிக்கிறது. பெண்ணுக்குக் கல்வி கூடாது, பெண்புத்தி பின்புத்தி, பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே என்ற புன்மொழிகள் பிறந்த சூழ்நிலையில் பெண்ணடிமை இருந்தது என்று கூறலாம். அது இந்தக் காலத்திலும் மூலைமுடுக்குகளில் இருந்துவருகிறது. பொதுவாகக் கூறுகிறேன். எங்கெல்லாம் தோள்வலியை விட நெஞ்சின் திட்பம் பெரிதாகப் போற்றப்படுகின்றதோ, எங்கெல்லாம் வாள்வலியைவிடச் சொல்லின் செம்மை சிறந்ததாகப் போற்றப்படுகின்றதோ, அங்கெல்லாம்

நாகரிகம் உண்டு ; அத்தகைய நாகரிகம் நிலவும் இடங்களே உரிமை (ஆண் உரிமை, பெண் உரிமை எல்லாம்) நிலவும் இடங்கள் ; அந்த நாகரிகம் இல்லாத நிலையே அடிமைத் தன்மை மிக்க நிலை. அது பழங்காலத்திலும் ஓர் அளவு உண்டு ; இக்காலத்திலும் ஓர் அளவு உண்டு.

அந்தக் கால நிலையை ஒட்டி இல்வாழ்க்கை சீராய் நடைபெறுவதற்காக முன்னோர் சில திட்டங்கள் அமைத்திருந்தனர். ஆண் உடல்வலி மிகுந்தவன் ; ஆகையால் அவன் வெளியுலகில் அலைந்து பொருள் தேடுக என்று அமைத்தனர். பெண் உடல்வலி குறைந்தவள் ; ஆக்க வேலையில் ஆர்வம் நிறைந்தவள் ; ஆதலால் வீட்டிலிருந்து அமைதியைக் காத்துவருக என்று அமைத்தனர். அலைவுக்கு ஏற்றது ஆண்உடல், அமைதிக்கு உரியது பெண் உடல் என்று அவர்கள் வகுத்த முறை இயற்கையோடு இயைந்த முறையாக இருந்தது. அதற்கு ஏற்றவாறே ஆண் வயதில் மூத்தவனாக இருக்குமாறும் பெண் இளையவளாக இருக்குமாறும் ஏற்படுத்தினர். இந்த ஏற்பாட்டில் தவறு காண முடியாது. இன்றைக்கும் உலகில் பெரும்பான்மையோர் இதையே போற்றிவருகின்றனர்.

இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக, உடல்வலி மிகுதியாக இல்லாமலே பொருள்தேட முடியும் ; யந்திரங்களைக் கொண்டே தொழில்களைச் செய்து முடிக்க இயலும். ஆதலின் இன்றைய நிலையில் பெண்ணும் வெளியுலகக் கடமைகளுக்கு ஏற்றவளாக இருக்கிறாள். அதனால் பழைய குறை மாறுவதற்கு இடம் உள்ளது.

இவ்வாறு மாறுதலுக்கு இடம் அமைந்த பிறகும், இயற்கையை முழுதும் வென்றுவிட்டதாகக் கூறமுடியாது. வீட்டிலிருந்து கடமை பலவற்றைச் செய்யவேண்டியவளாக, செய்யத் தக்கவளாக அமைந்துள்ளவள் பெண்ணே என்று கூறும் நிலை இன்றும் உள்ளது.

எப்படி மாறினும் மாறட்டும். வீட்டுக்கு வெளியே சென்று தொழில்செய்துவிட்டுத்திரும்பும் நிலையே ஆனாலும் சரி; அல்லது வீட்டுக்குள்ளே இருந்து குடும்பப்பொறுப்பை மேற்கொள்ளும் நிலையே ஆனாலும் சரி; கணவனோடு ஒரு வீட்டில் நெடுங்காலம் வாழ்வதானால், முன்னோர்களின் அறிவுரை பயன்படும்; எந்த நிலையிலும் பயன்படும். இந்த இரண்டு நிலையை மட்டும் கூறி நின்றுவிடவில்லை. எதிர்காலத்தில் திருமணம் செய்துகொள்ளாமலே நட்புக் கொண்டு வாழும் ஆண்பெண்வாழ்க்கை மிகுதியாகும் போல் தெரிகிறது. அந்த மூன்றும் நிலை வந்தாலும், நெடுங்காலம் அன்பை வளர்த்து வாழ்வதானால், அவர்களுக்கும் அந்த அறிவுரை பயன்படும். வாழ்நாள் வரையில் மாறாத அன்புடன் ஒரு நெறியாக வாழும் வாழ்க்கையைத்தான் முன்னோர்கள் கற்பு என்று சொன்னார்கள். பொருளாதார அரசியல் சமூகத் துறைகளில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டு ஆண்களின் உலகம் குழம்பிய போதிலும் உண்மைநட்பு என்பது ஒரு சிலர்க்குள் இருந்துவருகிறது அல்லவா? பெண்கள் எவ்வளவு முற்போக்கு எய்தினாலும், அன்புருவான தாய்மை என்பது ஒன்று அழியாமல் இருந்துவருகிறது அல்லவா? அவைபோல், இல்வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்ட போதிலும், கற்பு என்பது ஒன்று சிலரிடையே இருந்துவரும். முன்னோர்களின் நெறி அந்தச் சிலருடைய வாழ்க்கையிலாவது காணப்படும் என்று நம்புகின்றேன். முன்னோர்களின் பழக்க வழக்கங்கள் அடியோடு மாறிப்போகலாம்; மாறுவது இயற்கையுமாகும். ஆனால் நெறி என்றும் உள்ளது; மாறாதது.

முன்னோர்களின் அறிவுரை என்ன? இல்வாழ்க்கையில் தியாகம் வேண்டும். ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். ஒருவரிடத்தில் குறை

இருக்கலாம். அந்தக் குறையைக் கடந்து மற்றவர் அன்பு செலுத்த வேண்டும். ஒருவர் தீமை செய்யலாம்; அதையும் பொறுத்து மற்றவர் அன்பு செலுத்த வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போது, எடுத்துக் கூறித் திருத்த முயலலாம்; உரிமையோடும் போராடலாம். அப்போதும் அன்பு மாறக் கூடாது. இவைகளில் தவறு என்ன?

குறை இல்லாதவர்களை உலகில் காண முடியாது. ஆகவே கணவனும் மனைவியும் குறைகளுக்கு இடையே வாழ்க்கை நடத்தித் தீரவேண்டும். குறைகளைக் கண்டவுடன் உரிமைப் பேச்சுப் பேசுவதில் பயன் என்ன?

இன்னொன்றும் எண்ணிப் பார்க்கலாம். கருத்துக்களிலும் பண்புகளிலும் முழுதும் ஒத்திருப்பவர் இருவர் திருமணம் செய்துகொள்வதாகவே வைத்துக்கொள்ளலாம். அதன்பிறகு அவர்களின் கருத்துக்களும் பண்புகளும் மாறுமல் அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியுமா? அவர்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தொழில் செய்பவராக இருப்பார்கள்; அல்லது, கணவன் வெளியே தொழில் செய்ய, மனைவி வீட்டைப் போற்றுபவளாக இருக்கலாம். எப்படியும் இடம் வேறு, தொழில் வேறு, சூழ்நிலை வேறு, பழகும் ஆட்கள் வேறு வேறு. இவ்வாறு வேறுபடும் இடம் தொழில் முதலியவைகளால், நாளடைவில் கருத்துக்களிலும் பண்புகளிலும் சிறு சிறு வேறுபாடுகள் ஏற்பட்டுத் தீரும். தவிர, முதலில் ஒத்த அறிவு இருந்தபோதிலும் பிறகு படிப்படியே அறிவு வளர்ச்சியில் வேறுபாடு காணப்படும். எது இல்லை என்றாலும், உடல்வளர்ச்சியில் வேறுபாடு இருந்தே தீரும். அதன் காரணமாக, பண்புகளில் மாறுதல் ஏற்படக்கூடும். ஆகையால் எல்லா வகையிலும் ஒத்திருப்பவர் இருவர் மணம் செய்துகொண்டாலும், அவர்கள் இறுதிவரையில் அவ்வாறே இருக்க முடியாது. அங்கிலையில் அவர்கள்

ஒத்த உரிமை பற்றி வெறும் பேச்சுப் பேசுவதால் பயன் என்ன? தொடக்கத்திலேயே மாருத அன்பு நெறியை நம்பிப் போற்றி, விட்டுக்கொடுக்கும் கலையைக் கற்கலாமே!

இந்தக் கலையைக் கற்க முடியாத காரணத்தால், இக் காலத்தில் மணமுறிவு மிகுந்துகொண்டு போகின்றது. மனமுறிவு அதைவிட வேகமாகப் பெருகிக்கொண்டு போகின்றது. அஞ்சாமை உள்ளவர் செல்வர் சிலர்மட்டும் மணமுறிவு தேடிக்கொள்ள முடிகின்றது. மற்றவர்கள் என்ன செய்வது? செல்வம் இல்லாத காரணத்தாலும், பெயர் பெருமை மானம் முதலியவற்றிற்காக அஞ்சும் காரணத்தாலும் பெரும்பாலோர் மணமுறிவு தேட வழி யற்றவர்களாய் மனமுறிவோடு நின்று காலம் கழிக் கின்ருர்கள்.

மணமுறிவு தேடிக்கொள்கின்றவர்கள், இரண்டாவது வாழ்க்கையில் குறையற்ற உரிமைநிலையைப் பெறமுடி கின்றதா? அதுதான் இல்லை. முதல் மனைவியே மேலான வள் என்று ஏங்குகின்ற கணவன்மாரும், முதல் கணவனை நினைந்து கண்ணீர்விட்டு இரங்குகின்ற மனைவியரும் மேற்குநாடுகளில் உண்டு. இந்த அனுபவத்தின் பயனாக, “எல்லோரிடத்திலும் இப்படி ஏதேனும் குறை இருக்கும் போல் தெரிகிறது” என்ற ஞானம் பெறுகின்ருர்கள்; விட்டுக்கொடுக்கும் கலையைக் கற்றுக்கொண்டு வாழ முற் படுகிருர்கள். இந்த நல்லறிவு முதலில் நடத்திய இல் வாழ்க்கையில் இருந்திருந்தால் இவர்கள் மணமுறிவு தேடி யிருக்கமாட்டார்கள். ஆனல் என்ன செய்வார்கள், பாவம்! பட்டால்தான் அறிவு வருகிறது.

படாமலே அறிவு பெறும் வழி, நம் முன்னோர்கள் வகுத்த வழி. வாழ்க்கையிலேயே ஒரு பண்பாட்டை வளர்த்து அதை நம்பும்படியாகச் செய்திருக்கிருர்கள். உரிமைக்கு முதலிடம் கொடுத்தால் வெறுப்பு வேரூன்றும்

என்று அறிந்து, கடமையை வற்புறுத்தினார்கள். ஒருகால் வெறுப்புத் தோன்றினாலும், அன்பின் துணைகொண்டு அதை முளையிலேயே கிள்ளி எறியுமாறு செய்தார்கள். ‘இளைதாக முள்மரம் கொல்க’ என்பது இந்த நெறி. அந்த முள்மரம் காழ் ஏறிய பிறகு கோடரி கொண்டு கை நோக வெட்டி எறிவது மேற்குநாட்டு நெறி.

மணமுறிவை மேற்குநாட்டு நெறி என எள்ளிப்பேசி நம்மைப் பற்றிப் பெருமை கொள்வதில் பயன் இல்லை. நம் நாட்டில் இன்றுள்ள நிலை பெருமைகொள்ளத் தக்கதாக இல்லை. இங்கே மனமுறிவு வளர்ந்துகொண்டு போகிறது. நம் நாட்டில் படித்தவர்கள் பலர் பழைய நெறிமுறையிலும் நம்பிக்கை இல்லாமல், மேற்குநாட்டுப் புதுவழியையும் மேற்கொள்ளாமல், இரண்டும்கெட்டவர்களாய்த் திரிகிறார்கள். அவர்களைப் பற்றி நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

உலகம் திருந்துவது இருக்கட்டும். முன்னே நீ உன் நெறியை வகுத்துக்கொள். பழைய நெறியா, புதிய வழியா என்று இரண்டில் ஒன்றை உறுதிப்படுத்திக்கொள். நீ பழைய நெறியைப் போற்றுகின்றாய் என்று எனக்குத் தெரியும். அதில் பிடிவாதமாய் நின்றுவிடு. கொள்கைகளைப் பொறுத்தவரையில் – பிறர்க்குத் தீங்கு இல்லாத போது – நம் உறுதி நமக்குப் பெருநன்மை விளைப்பது திண்ணம். காந்தியடிகள் போன்ற பெருமக்கள் கொள்கைகளில் பிடிவாதமாய் இருந்த காரணத்தால்தான் உலகிற்கும் நன்மை செய்தார்கள்; தாங்களும் உயர்ந்தார்கள். ஆகையால் கொள்கைகளில் நெறிகளில் உறுதி நல்லது.

ஆனால், பிறரிடம் கொள்ளும் விருப்பு வெறுப்புகளில் பிடிவாதம் காட்டாதே. இதில் பிடிவாதம் பெருந்தீங்கு உண்டாக்கும். ‘பெண்கள் பிடிவாதமானவர்கள்; நினைத்ததை முடிக்காமல் விடமாட்டார்கள்’ என்று

பழிச்சொல் இருக்கிறது. நீ அதை மாற்றிவிடு. அன்புக்காக விட்டுக்கொடுப்பவர்கள் பெண்கள் என்பதை உன் வாழ்வில் புலப்படுத்து.

பிறர்மனம் நோக நடந்துகொள்வதில் பிடிவாதமாய் இராதே. அன்பு வளரட்டும், அன்பு வாழட்டும் என்று தோற்றுப்போய்விடு. இப்படித் தோற்றுப்போவதால் ஒரு கெடுதியும் இல்லை; ஒன்றையும் இழந்துவிடுவது இல்லை. வேண்டும் என்றே தோற்றுப்பார். மனத்தின் முனைப்பு அடங்கிவிடும். ஒரு தீமையும் இல்லை. வாழ்க்கையில் எத்தனையோ துறைகளில் சோதனை செய்து செய்து பார்த்துத் தெரிந்துகொள்கிறோம். இப்படி அன்புக்காகத் தோற்றுப்போவதில் பயிற்சி பெற்றால் என்ன? எத்தனையோ புட்டிமருந்துகளைச் சாப்பிட்டுப் பார்ப்பவர், நெடுங்காலமாக அனுபவத்தில் இருந்துவந்த பழைய மருந்து ஒன்றை உட்கொண்டு பார்த்தால் என்ன? அல்லது, உலகமெல்லாம் போற்றும் மருத்துவர் ஒருவர் சொல்லும் அறிவுரை என்று தயங்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி உலகம் போற்றும் மருத்துவர் — மனநோய் மருத்துவர் — திருவள்ளுவர். அவர் 'சொல்கிறார்: ஒப்பு அல்லாதவர்களிடத்தும் தோற்றுப்போவதே சான்றோரின் தன்மை என்கிறார். அவருடைய அறிவுரையைக் கண்மூடித் தன்மையோடு ஏற்றுக்கொள்வதில் தீமை ஒன்றும் இல்லை. பல தலைமுறைகளாக உலகம் பின்பற்றி நன்மை கண்டு நற்சான்று அளித்துப் போற்றிய முறை அது. ஆகையால் முன்னும் பின்னும் எண்ணாமல் அந்த முறையைப் போற்றுவது நல்லது. ஒப்பு அல்லாதவரிடத்தும் தோற்றுப்போவது நல்லதானால், அன்பான வாழ்க்கையில் ஒத்த உரிமை உள்ள ஒருவரிடம் தோற்றுப்போவது மேலும் பெருமை அல்லவா? இதை உலகம் நம்பத் தயங்குகிறது! அதனால் அல்லல்படுகிறது.

உன் கணவர் ஒன்றைச் சொல்லலாம் ; அது தவறு என்று உனக்குப் படலாம். அவர் அதையே வற்புறுத்தலாம் ; உன்னைக் கடிந்தும் கூறலாம். அப்போது பொறுத்துக்கொள். அவசரப்படாதே. தலைமுழுகிப் போய்விடாது. சிறிது நேரம் கழிந்து, அல்லது சில நாள் கழிந்து, 'அப்போது இப்படிச் சொன்னீர்களே !' என்று மெல்லச் சொல்லு ; கடுமையாய் வேகமாய்ச் சொல்லாதே. நகை முகத்தோடு அன்போடு சொல். அவர் மனம் மாறுவார். அதோடு விட்டுவிடு. அல்லது, அப்போதும் உணராமல் உன்னை மேலும் கடிந்தால், மேலும் அந்தப் பேச்சைத் தொடராதே. அதில் அவரே வென்றவராக விளங்கட்டும். சில நாள் அல்ல, சில ஆண்டுகள் வரையில் பொறுக்கும் பழக்கமும் வந்துவிடும். நீ யார்மரபில் வந்தவள் என்று எண்ணிப்பார். கணவனுடைய தவறான வாழ்க்கையைக் கடிந்து கூறாமல் வெறுத்துப் பகைக்காமல் பல ஆண்டுகள் பொறுத்திருந்த கண்ணகியின் மரபில் வந்தவள் நீ. கண்ணகி சில நாட்கள் பொறுக்கவில்லை ; சில ஆண்டுகள் பொறுக்கவில்லை ; பல ஆண்டுகள் பொறுத்த பெருமனம் படைத்தவள். கணவன் தவற்றை அவள் மறக்கவில்லை ; அஞ்சி அடங்கிவிடவில்லை. பெருமனத்தோடு பொறுத்திருந்தாள். தன் உரிமையை இழந்துவிடாமல் பொறுத்திருந்தாள். அதைக் கடிந்து கூறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று காத்திருந்தாள். கணவனே மனம் மாறி இரங்கும் நிலை வரும்வரையில் காத்திருந்தாள். அந்த நிலை வந்ததும், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" எனக் கடிந்துரைத்தாள். இத்தகைய பெருமனம் இருந்த காரணத்தால்தான், ஒரு துறவியின் உள்ளத்தில் கோயில்கொள்ள முடிந்தது ; அங்கிருந்து ஒரு காவியக்கோயிலில் வாழவும் முடிந்தது.

இந்த உலகம் எவ்வளவு வேகமாக மாறினாலும் மாறட்டும் ! திருமணமே இல்லை என்ற அளவிற்குப் புதிய உலகம்

உரிமை வடிவாக வந்து நின்ருலும் நிற்கட்டும். அப்போதும் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வல்லவர்கள் கண்ணகி போன்ற பெண்களைப் போற்றியே தீர்வார்கள். ஏன் தெரியுமா? மனிதன்மனம் இப்படித் தியாகம் செய்பவர்களையே என்றும் விரும்பும். அது இயற்கை. எவ்வளவு உரிமை நாட்டம் உடையவனுக இருந்தாலும், ஒரு வியாபாரி தனக்கு இயைந்து நடப்பவனையே கணக்குப்பிள்ளையாக வைத்துக் கொள்ள விரும்புகிருன். எவ்வளவு முற்போக்கு உடையவனுக இருந்தாலும், ஒரு பத்திரிகை ஆசிரியன் தனக்காகத் தியாகம் செய்யக்கூடியவனையே துணையாசிரியனுக வைத்துக் கொள்ள விரும்புகிருன். எவ்வளவு சீர்திருத்தக்காரனுக இருந்தாலும், ஓர் அரசியல் தலைவன் தனக்காகச் சொந்தக் கொள்கைகளை விட்டுக்கொடுக்கக் கூடியவனையே தன் செயலாளனுக வைத்துக்கொள்ள விரும்புகிருன். இவ்வாறே ஒவ்வொரு துறையிலும் மனிதன் தனக்குத் துணையாக ஒருவனை நாடும்போது, கண்ணகி போன்ற மனம் உடையவனையே நாடுகின்ருன். இந்த மனப்பான்மை என்றும் இருக்கும்; உலகம் எவ்வளவு மாறினுலும் அதன் பிறகும் இருக்கும். அதனுல் அன்றும் கண்ணகியின் சிறப்பு எல்லோராலும் போற்றப்படும். திருமணம் போகலாம்; இல்வாழ்க்கை மாறலாம்; ஆனுல் ஆண் பெண் துணை தேடும் போதும், பெண் ஆண் துணை தேடும்போதும் இந்த மனப்பான்மை மட்டும் மாருது.

உன் அன்புள்ள,

வளவன்.

# 4

அன்புள்ள தங்கை,

உலகத்தில் எவர்க்குள்ளும் உண்மையான சமத்துவம் இல்லை; இருக்கவும் முடியாது. மக்கள் வெவ்வேருன ஆற்றலுடனும் பண்புகளுடனும் பிறந்து வளரும்படியாகப் படைப்பு அமைந்துள்ளது. ஆதலின் சமத்துவம் என்பது இயற்கையில் இல்லை.

இயற்கையை வெல்ல முயலும் மனிதன் சமத்துவத்தைப் படைக்க முயல்கிருன். சமத்துவத்தை அன்பால் ஏற்படுத்திக்கொள்கிருன். அல்லது சட்டத்தால் அமைத்துக்கொள்கிருன்.

மனத்தின் தொடர்பு அவ்வளவாக இல்லாத துறைகளில் சட்டத்தின் சமத்துவம் நிலைக்கும். இல்வாழ்க்கை என்பது மனத்தின் உணர்ச்சிகளையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டது. அதனுல் சட்டம் இங்கே என்ன செய்ய முடியும்? அன்பு ஏற்படுத்தும் சமத்துவம்தான் இங்கே நிலைக்க முடியும்.

இடம், மொழி, பழக்க வழக்கம், உடல் நலம், வயது, நிறம், உள்ளப்பண்பு, கொள்கை, தொழில் முதலாயவற்ருல் எவ்வளவு வேறுபாடு இருந்தாலும், அன்பால் பிணைக்கப்பட்ட இருவர் சமத்துவ முறையில் பழகி நட்புக்கொள்ள முடிகின்றது. அன்பின் ஆற்றல் இது. இத்தகைய அன்பால், பொருத்தம் இல்லாதவர்கள் பலர் பொருந்தி வாழ்வதைக் காண்கிறேன். எடுத்துக்காட்டுக்கு எங்கெங்கோ அலைய வேண்டாம். நானும் உன் அண்ணியும் வாழும் வாழ்வு, அன்னையும் தந்தையும் வாழும் வாழ்வு

இவைகளே போதுமே. நண்பர் முருகையாவும் அவருடைய மனைவியும் வாழும் வாழ்வு... இன்னும் எத்தனையோ வாழ்க்கைகளை எடுத்துக்காட்டாகக் கூற முடியும்.

உன் கடிதத்தில் திரு. தேவசுந்தரியும் அவளுடைய கணவரும் வாழும் வாழ்க்கையைக் குறிப்பிட்டு, அவர்கள் அல்லல்படுகின்றார்களே என்று வருத்தத்தோடு எடுத்துக் காட்டியிருக்கிறாய். உண்மைதான். அவர்கள் வாழ்க்கை இரங்கத் தக்கதாக இருக்கிறது. ஆனால் அதற்குக் காரணம் இருக்கிறது.

அவர்கள் இருவரும் கொள்கை ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தும் இப்படி அல்லல்படுகின்றார்களே என்று குறித்திருக்கிறாய். அப்படிக் கொள்கையும் நெறியும் இல்லாதவர்களாக இருப்பதுதான் குறைக்கு அடிப்படைக் காரணம் என்று சொல்லத் தோன்றுகிறது.

கொள்கையில் உறுதியாக இருப்பவர்கள் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்று நீ எண்ணுவதாகத் தெரிகிறது. அப்படி ஒருகாலும் எண்ணாதே. கொள்கையில் உறுதியாக இருப்பதில் காந்தியடிகளைப் போன்றவர்களை நான் கண்டதில்லை. ஆனால் அவர் விட்டுக்கொடுக்காதவரா? பிறருடைய மனத்தை அறிந்து இணங்கி நடப்பதில், விட்டுக்கொடுத்துப் பொதுக் கடமையைச் செய்வதில் அவரைப் போல் வல்லவர்கள் யார்? நான் கொள்கையில் உறுதி உடையவன்தானே? என்னைப் பற்றி உன்னிடம் சொல்ல வேண்டுமா? நான் உன் அண்ணியிடம் எவ்வளவோ விட்டுக்கொடுத்து அன்புடன் வாழவில்லையா? கொள்கையில் உறுதியுள்ளவர்களைப் பற்றி—இப்படித்தான் வாழவேண்டும் என்று நெறி வகுத்துக்கொள்கின்றவர்களைப் பற்றி—ஒன்று சொல்கின்றேன். அவர்கள் தன்னலம் குறைந்தவர்கள்; அதனால்தான் தம்மைவிடக் கொள்கைகளை மிகுதியாக மதிக்கிறார்கள். தன்னலம் இல்லாத

காரணத்தால் அவர்களின் உள்ளத்தில் அன்பு தோன்றவும் முடியும்; நிலைத்து வாழவும் முடியும்.

கொள்கை இல்லாமல் நெறி இல்லாமல் வாழ்கின்றவர் களைப் பற்றி நீயே சொல்லலாம். தன்னலம் அவர்கள் உள்ளத்தில் இல்லையா? அதுதான் விட்டுக்கொடுப்பதற் குத் தடையாக இருந்து கணவனையும் மனைவியையும் பிரிக் கின்றது. திரு. தேவசுந்தரி உன்னோடு பழகுவதில் நல்லவ ளாக இருப்பதாக எழுதுகிறாய். கணவனோடு ஏன் நல்லவ ளாகப் பழகவில்லை? அவளுடைய கணவன் எனக்குப் பழக்க மில்லாவிட்டாலும், நம் அருளப்பருக்குப் பழக்கமாம். அவ னும் கெட்டவன் அல்ல என்று அவர் சொல்கிறார்.

இவர்களையும் இவர்களைப் போன்றவர்களையும் நான் அடிக்கடி உலகத்தில் பார்க்கிறேன். இவர்கள் ஓரளவு தியாகம் செய்ய முன்வந்து, இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு நெறி வகுத்துக்கொண்டால், முன்னேறலாம். அதனால் தன்னலம் சிறிது குறையும்; அன்பு வளரும்; விட்டுக்கொடுக்கும் கலை வளரும். ஆனால் நாம் என்ன செய்வது? இதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண் டுமே! இந்தக் காலத்துக் கல்விமுறை, நாகரிகப்போக்கு, கலையுலகம், அரசியல் வெறி எல்லாம் அவர்களை வேறு வகையில் இழுக்கும்போது, நாம் மட்டும் இந்தப் பக்கம் நின்று அழைத்தால் திரும்பிப் பார்ப்பார்களா?

திருவள்ளுவரின் அறத்துப்பால் நெறி – அதாவது, காந்தியடிகளின் எளிய தூய நெறி: இதை நம்பினால் எவ்வளவோ தொல்லைகளை எளிதில் தீர்த்துக்கொள்ளலாம். தனிவாழ்க்கையைப் பொறுத்தமட்டில்தான் இதைச் சொல் கிறேன். நெறியை முழுவதுமாக நம்பாவிட்டாலும், ஆடம் பரமற்ற ஆணவமற்ற அமைதியான வாழ்க்கை நல்லது என்பதையாவது நம்புவார்களானால் போதும். ஆடம்பரம், ஆணவம், ஆரவாரம் இவைதான் இந்தக் காலத்து நாகரிகத்

தின் உயிர்நாடிகள். தனிவாழ்க்கையில் மனம் பண்படுவதற்கு இவைகள் தடைகள் என்பது என் கருத்து.

தன்னலம் தன்னலம் என்று குறிக்கும்போது, தன் உடம்புக்கு வேண்டியதை எப்படியாவது தேடிக் கொள்ளுதல், தனக்கென்று செல்வம் சேர்த்துக்கொள்ளுதல் ஆகிய இவற்றை மட்டும் எண்ணுதே. தன் உடம்புக்கு வேண்டியதைத் தேட வேண்டியதுதான்; ஆனால் எப்படியாவது தேடிக்கொள்ளலாகாது. செல்வம் சேர்க்க வேண்டியதுதான்; ஆனால் கணவன் அறியாமல் மனைவியும், மனைவி அறியாமல் கணவனும் சேர்ப்பது கூடாது. இவற்றில் மட்டும் தன்னலத்தைப் பற்றி நான் குறிக்கவில்லை. இவற்றைவிடக் கொடிய தன்னலத் துறைகள் சில உண்டு. தனக்கென்று மிகுதியாகப் புகழ் தேடிக் கொள்வது பொல்லாத தன்னலம்; தன் மானத்தைப் பெரிதாக எண்ணுதல் அதைவிடக் கொடிய தன்னலம். கணவன் மனைவி என்று இருவர் சேர்ந்து வாழத் தொடங்கியபிறகு, தனியே புகழ் தேடுவதும் தனியே மானம் போற்றுவதும் தவருனவை. உடம்பின் காரணமாகக் கெட்ட இல்வாழ்க்கை ஒரு பங்கு என்ருல்; பணத்தின் காரணமாகக் கெட்ட இல்வாழ்க்கை இரண்டு மூன்று பங்கு எனலாம்; புகழ் மானம் இவற்றின் காரணமாகக் கணவனும் மனைவியும் தம் மனத்தைப் பாழாக்கிக்கொண்டு பிறகு வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வது ஏழெட்டுப் பங்கு இருக்கும். கணவன் புகழைக் கண்டு மகிழும் மனம் இல்லாதமனைவி, மனைவியின் மானத்தைத் தன்மானமாகக் கருதாத கணவன் – இவர்கள் சேர்ந்து வாழத் தகுதி உடையவர்களா? உடம்பு, பணம் இவற்றில் சுற்றத்தாரும் அயலாரும் தலையிடுவது குறைவு. ஆனால் புகழ் மானம் ஆகிய துறைகளில் எல்லாரும் (தாய்வீட்டார், மாமிவீட்டார் நண்பர்கள் உட்பட எல்லாரும்) தலையிட்டு அவரவர்

கள் பங்குக்குத் தூபம்போட்டு இல்வாழ்க்கைக்குத் தீமை செய்வதை நீ எங்கும் பார்க்கலாம். இந்தத் தொல்லைகள் இல்லாமல் அமைதியாக வாழ வழி சொல்லட்டுமா? புகழ் மானம் ஆகியவற்றையும் ஆடம்பரப் பொருள்களாகக் கருதி ஒதுக்கி எளிய வாழ்க்கையை நாடு. ஒழியட்டும் அந்த மயக்க உணர்ச்சிகள்!

நாம் குடும்பத்தோடு பூனாவுக்குப் போயிருந்தபோது ஆகாகான் அரண்மனையை அடுத்த பூங்காவில் கஸ்தூரி பாவின் சமாதியின் அருகே இருந்து உருகியது உன் நினைவில் இருக்கும். அப்போது அப்பா அம்மாவை நோக்கிச் சொன்ன சொற்கள் நினைவில் இருக்கின்றனவா? "இந்த அம்மாவின் கணவர் காந்தியடிகள் உலகத் தலைவர். கணவரின் வழியைக் கண்மூடிப் பின்பற்றிய உத்தமி இவர். இந்த அம்மாவைப் போல் எளிய வாழ்க்கை வாழ எந்தப் பெண்ணாலும் முடியாது. கணவர் உலகத் தலைவர். உலகத் தலைவரின் மனைவி, பருத்திப் புடைவையும் சங்கு வளையலும் தாலியும் தவிர, எந்த ஆடம்பரமும் அறியாமல் வாழ்ந்துவிட்டு மறைந்தார்" என்று அப்போது அப்பா சொன்னசொற்கள் இன்னும் என்செவியில் ஒலிக்கின்றன.

எளிய வாழ்க்கை வாழ்வது சிறந்த அறம் என்பது ஒருபுறம் இருக்கட்டும். "வேண்டாமை அன்ன விழுச் செல்வம்" என்ற மந்திரம் திருக்குறளிலும் உள்ளது. அதனால் உலகத்திற்கு விளையும் நன்மை இருக்கட்டும். தனியாட்களுக்கே அதனால் எவ்வளவோ பயன் உண்டு. முதலாவதாக மனம் பண்படுகின்றது. அதுவே போதுமே.

இன்றைய சமுதாய அமைப்பும் பொருளாதார அமைப்பும் தக்க முறையில் இல்லை. ஆகையால் எத்தனையோ பேர் வாழ்வதற்கே வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறார்கள். உடம்பால் உழைக்கப் பலர் காத்திருக்கிறார்கள்; ஆனால் வேலை இல்லை. மூளையால் உழைக்கப் பலர்

காத்திருக்கிருர்கள் ; தொழில் இல்லை. ஒரு சிலர்க்கு மட்டும் எப்படியோ இடம் கிடைத்துவிடுகிறது. அவர்கள் மட்டும் காலூன்றி நிலைத்துவிடுகிருர்கள் ; மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை ; தங்கள் மனைவிமக்களை மட்டும் காப்பாற்றிக் காலம் கழிக்கின்ருர்கள். மற்றவர்கள் வாழ்வதற்கும் வயிறு வளர்ப்பதற்கும் வழி இல்லாமல், வாய்ப்பே இல்லாமல் தவிக்கின்ருர்கள். அவர்களைப் பற்றி இரக்கத்தோடு எண்ணுவார் இல்லை ; அந்த ஏழைகள் கேட்டுவந்தது அவ்வளவுதான், அவரவர்க்கு அன்று அளந்தபடிதான் இன்று கிடைக்கும் என்று சோம்பேறிப் பேச்சைப் பேசித் தட்டிக் கழிக்கின்ருர்கள். இவர்களாவது தொடர்ந்து இன்பமாக அமைதியாக வாழ்கிருர்களா என்ருல் அதுவும் இல்லை. உள்ள தொழிலில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டால், அதற்கு ஒரு முடிவு ஏற்பட்டால், வருவாய் வற்றினுல், இவர்களும் நிலை கலங்குகின்ருர்கள் ; தடுமாறுகின்ருர்கள் ; தவிக்கின்ருர்கள். அப்போது இவர்களைப் பார்த்தும் இரங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. சுருங்கச் சொன்னுல், இன்றைய சமுதாயத்தில் வாழ்வு என்பது நூற்றுக்கு இருவர் மூவர்க்கு மட்டுமே உரிய கலையாக அமைந்துள்ளது. பெரும்பாலோர் தடுமாறியும் தவித்தும் நசுங்குகின்ற ஒரு சமுதாயம் நாகரிகமானது என்று சொல்ல நாக்குக் கூசுகின்றது. பிறந்த பறவைகள் அத்தனையும் வாழ்கின்றன ; பிறந்த விலங்குகள் அவ்வளவும் வாழ்கின்றன. ஆனுல் மனிதர்கள் பிறக்கின்ருர்கள் ; அவர்களில் ஒருசிலர் மட்டுமே வாழ்கின்ருர்கள் என்ருல், அதைவிட அநாகரிக அமைப்பு ஒன்று உண்டா ? எண்ணிப்பார். இவ்வளவு சீர்கெட்ட நிலை நம்மைச் சுற்றிலும் உள்ளபோது, நாம் ஆடம்பரத்தை நாடுவது தகுமா ? மனமாரச் சொல்கின்றேன். இன்றைய நிலையில், பாவங்களில் பெரிய பாவம், குற்றங்களில்

முதல் குற்றம் எது என்று என்னைக் கேட்டால், விபசாரம் கொள்ளை கொலை என்று எவ்வெவற்றையோ சொல்ல மாட்டேன். ஆடம்பர வாழ்க்கை என்ற ஒன்றைத்தான் சொல்வேன். ஏன், தெரியுமா?

விபசாரம் கொள்ளை கொலை முதலியவை ஒரு சிலரைத்தான் அழிக்கின்றன. ஆனால் ஒரு சிலருடைய ஆடம்பர வாழ்க்கை எத்தனையோ ஏழைமக்களின் அமைதியான வாழ்க்கையைப் பாழ்படுத்தி அல்லல் விளைக்கின்றது.

வைர நகைகள் போட்டுக்கொண்டிருப்பவளைப் பார்த்து, இல்லாத பெண் ஏங்குகிறாள்; கணவனிடம் போராடுகிறாள்; கணவனுடன் பிணங்குகிறாள். அது மனமுறிவு வரையில் வளராமல் போராட்டத்தோடும் பிணக்கோடும் நின்றுவிட்டால் புண்ணியம் என்றுதான் சொல்லவேண்டும். கணவன் இதைச் சுருக்கி அதைச் சுருக்கிப் பணம் சேர்த்து வைரநகை வாங்கிப் போடுகின்றான்; அல்லது திருவள்ளுவரின் அறத்தில் நம்பிக்கை கொஞ்சம் தளர்ந்தவனாக இருந்தால், இதில் கொஞ்சம் திருடி அதில் சிறிது திருடிப் பணம் சேர்த்து வாங்கித் தருகின்றான். வள்ளுவர் குறளை வாயளவுக்கு வைத்து விடத் துணிந்தவனாக இருந்தால், இவரை இங்கே ஏமாற்றி அவரை அங்கே ஏய்த்து லஞ்சம் பெற்று மனைவி கேட்டதை வாங்கித் தருகின்றான். அல்லது, கணவன் கதியற்றவன் என்றோ, கவலையற்றவன் என்றோ மனைவி தெரிந்து கொண்டால், அவன் சேர்க்க முடியாத பணத்தைத் தானே சேர்த்து வாங்க முயல்கின்றாள். கணவன் கள்ளவழியில் லஞ்சம் வாங்க வகையற்ற நிலையில் இருந்தால், மனைவி இன்னொருவனோடு கள்ள உறவு கொண்டு விபசார வாயிலாகப் பணம் பெற்று வைர நகை வாங்கிக்கொள்கிறாள். லஞ்சம், திருடு, ஒழுக்கக்கேடு, நோய், விபசாரம், அது முற்றினால் கொலை எல்லாவற்றிற்கும் காரணம் தலைவிதி

என்று தன்னலக் கூட்டம் சொல்லிக்கொண்டிருக்கும். அந்த ஆடம்பரக்காரியின் காதில் சொலித்த வைரம் காரணம் என்று சிந்தனையாளர் சொல்லிவிடுவர். வைர நகை என்று ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டேன். அதுபோன்ற ஆடம்பரத் துறைகள் எல்லாவற்றையும் தனித்தனியாக எண்ணிப்பார். பெரும் பாலான குற்றங்கள் இப்படி நாட்டில் விளையும்போது, ஒரு சிலரின் ஆடம்பர வாழ்க்கையைத் தடுக்க ஆற்றல் இல்லாமல், உண்மைக் காரணத்தை எடுத்துச் சொல்லவும் ஆண்மை இல்லாமல், நாட்டில் லஞ்சம் பெருகிவிட்டதே என்று அலறுகிறுர்கள் ; நேர்மை குன்றிவிட்டதே என்று கதறுகிறுர்கள் ; ஒழுங்கும் ஒழுக்கமும் குறைந்துவிட் டனவே என்று கூக்குரலிடுகின்றுர்கள். சாய்க்கடை களைத் தேங்கி அழுக விட்டுவிட்டு, அவற்றின் பழமையை யும் புகழ்ந்துகொண்டு, கொசுக்கள் பெருகிவிட்டனவே என்று கூக்குரலிடுகின்றவர்கள் இவர்கள். ஏழைமக் களின் வாழ்க்கைநிலையை உயர்த்துதல், உணவு உடை தொழில் கல்வி ஆகிய அடிப்படைத் தேவைகளை எல்லோர்க் கும் அமைத்துத் தருதல் இவைகளைச் செய்யக் காலம் ஆனாலும் ஆகட்டும். போட்டிக்கும் பூசலுக்கும் குறை களுக்கும் குற்றங்களுக்கும் வழி அமைத்துத் தருகின்ற இந்த ஆடம்பரங்களையாவது தடுக்கலாமே ! இதற்கு ஒரு சட்டம் பிறப்பிக்க ஒருவர் துணிவாரானுல், அவரைத்தான் நாட்டின் முதல் தொண்டர் என்று நான் போற்றுவேன். ஏன் ? அவர்தான் சமுதாய அழிவுக்குக் காரணமாக வளரும் நோயைத் தீர்க்க முடியாவிட்டாலும், வளராமல் தடுக்கவாவது துணிந்தவர் என்று அவரைப் போற்றுவேன்.

இவ்வளவும் ஏன் எழுதினேன் ; உனக்கு அரசியல் அறிவுறுத்துவதற்காக அல்ல ; உன் உள்ளத்தில் ஆடம்பர மோகத்தை அழிப்பதற்காகத்தான்.

உன்மேல் குற்றம் சொல்லவில்லை. பெரும்பான்மையான பெண்களே இவ்வகையில் பிற்போக்காக இருக்கிறார்கள். மற்ற வகையில் பிற்போக்கு என்று நான் சொல்வதில்லை. இந்த ஒருவகையில்தான் பெண்ணுலகில் உண்மையான பிற்போக்கு இருக்கிறது. ஆத்திரம் அடையாதே. எண்ணிப்பார். ஆடம்பர மோகம் இல்லாத பெண் யார் என்றே கண்டுபிடிப்பது அருமையாக உள்ளது. ஆண்கள் பலர் எளிய உடை உடுத்து எளிய வாழ்வு வாழ்கின்றார்கள். ஆனால் பெண்களில் எத்தனைப்பேர் அவ்வாறு வாழத் துணிகிறார்கள்? ஏழைப் பெண்கள்தான் வறுமையின் குறையால் எளிய கோலத்தோடு காணப்படுகின்றார்கள். வறுமையில்லாத பெண்கள் எளிய வாழ்வு வாழ்கின்றார்களா? "வேண்டின் உண்டாகத் துறக்க" என்னும் கொள்கையை ஆண்கள் பலரிடம் உடை முதலியவற்றில் காண்கின்றேன். எல்லாம் இருந்தும் எளிய வெள்ளையாடை – பருத்தியுடை – உடுத்துப் பெருமையோடு திரிகின்றார்கள் ஆண்கள் பலர். ஆனால், எந்த அளவிற்கு ஆடம்பர ஏணியில் ஏறி நிற்க முடியும் என்றுதான் பெண்கள் முயல்கின்றார்கள். ஆடம்பரப் போக்கு இல்லையானால், தங்களுக்கு உலகத்தில் மதிப்பு இல்லை என்று எண்ணும் தாழ்வு மனப்பான்மை பெண்கள் பலரிடம் இயல்பாக உள்ளது. இதுதான் உண்மையான பிற்போக்கு என்பது என்கருத்து.

கஸ்தூரிபாவைப்போல் மிகமிக எளியவாழ்க்கை நடத்து என்று நான் உனக்குக் கூறவில்லை. முடிந்தால் அதுவும் நல்லது என்றே போற்றுவேன். அந்தத் துணிவும் தெளிவும் வீரமும் உனக்கு உண்டா என்று உன் நெஞ்சையே கேட்டுக்கொள். அது இருக்கட்டும். அழகாக விளங்குவதற்கு இவ்வளவு நகை, இவ்வளவு உடை இருந்தால் போதும் என்று ஒரு வரையறை – குறைந்த அளவு – ஏற்படுத்திக்கொண்டு கவலை இல்லாமல் வாழக் கற்றுக்கொள். அது போதும்.

ஆடம்பரம் இருந்தால்தான் அழகு இருக்கும் என்னும் உலகத்தாரின் மூடநம்பிக்கையைப் பொய்ப்படுத்திக்காட்டு. அழகு என்றாலேயே என் உள்ளம் குழைகிறது. என் பகைவனும் அழகாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றவன் நான். என் வேலையாள், என் வீட்டுக்கு வரும் தபால்காரர், எனக்குக் காய்கறி விற்கும் கடைக்காரர், என் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர், அலுவலகத்தில் என் பக்கத்தில் இருந்து வேலை பார்க்கும் கணக்கர்கள் எல்லோரும் அழகாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறவன் நான். ஆகையால் அழகுக்காகத் தனி முயற்சி செய்யாதே என்று ஒருபோதும் சொல்லமாட்டேன். ஆனால், ஆடம்பரத்தால்தான் அழகு தேடமுடியும் என்ற தவறான போக்கு வேண்டாம். ஆடம்பரத்தால் அழகு தேடுகின்ற பெண்களைப் பற்றி நீயே எண்ணிப்பார். பதின்மூன்று வயது முதல் இருபத்தைந்து வயது வரையில் அவர்களால் அழகைக் காக்க முடிகின்றது. சிலரால் அதுவும் முடியாமல் இருபது இருபத்திரண்டு வயதிலேயே பொங்தைகள்போல் தோன்றுகிறார்கள். சிலர் இருபத்தைந்து வயதிற்கு மேலும் முப்பது வயது வரையில் ஒருவாறு அழகாகவே இருக்க முடிகிறது. அப்புறம் என்ன ஆகிறது, தெரியுமா? உடனே அவர்களின் அழகு எல்லாம் தொப்பென்று விழுந்துபோகிறது. அதன்பிறகு அவர்களைப் பார்த்தாலே, பார்க்கின்றவர்களின் அழகும் பறந்து போகும்போல் தெரிகிறது. அழகு இருக்கும் இளமைக் காலத்திலும் அவர்களின் அழகில் பாதி செயற்கையாகச் செய்துகொள்ளப்பட்ட 'வேஷம்' என்றே சொல்லத்தக்கதாக இருக்கிறது. இதுதான் ஆடம்பரத்தால் விளையும் அழகு. நான் சொல்லும் அழகு அது அல்ல. வயது நாற்பது நாற்பத்தைந்து ஆனாலும் இளமை தவழும் முகம் விளங்கவேண்டும். ஐம்பது ஐம்பத்தைந்து ஆனாலும்

சித்திரப் பாவைபோல் சாயல் என்னும் மென்மை ஒளிர வேண்டும். இந்த விரிவெல்லாம் வேண்டாம். வயது ஆன பிறகும், ரவிவர்மா தீட்டிய கலைமகளின் வடிவம் போல் உடல் அமைப்பு விளங்கும்படியாகக் காத்துக்கொள்ளும் பெண்ணே அழகைக் காக்கும் பெண் என்று சொல்வேன்.

இதற்கு உரிய வழிகள் என்ன, தக்க உணவு என்ன, தக்க பயிற்சி என்ன, எந்த உழைப்பு நல்லது, என்ன பழக்க வழக்கங்கள் நல்லவை – இப்படி யாராவது எண்ணிப்பார்க்கின்றார்களா? இல்லையே. உன் அண்ணிக்கு எவ்வளவோ சொல்கின்றேன். அவளும் முழுதும் கேட்டு நடக்கவில்லை. உடம்பு பருமனாகாமல் காத்துக்கொள்ளும் முயற்சியாவது வேண்டுமே! அழகுக்குப் பகை ஒன்று உண்டு என்றால், அது இயைபு இல்லாமல் உடல் பருத்து வளர்வதுதான். ஆண்களுக்கும் அழகு வேண்டும். அவர்களுக்கும் இந்தக் கலை எல்லாம் தெரியவேண்டும். பெண்கள் அவர்களைவிட அக்கறையோடு இந்தக் கலையைப் போற்றவேண்டும் அல்லவா? உழைப்பு இல்லாமல் இருக்கக்கூடாது, களைப்பு உண்டாகுமாறு உழைக்கக்கூடாது, தசைநார் திரட்சி பெறுமாறு வன்மையான பயிற்சிகள் செய்யக்கூடாது, குடலில் ஊறிப் புளிக்கும் நிலையை வளர்த்துக்கொள்ள லாகாது, மென்மையான சுவையுள்ள உணவுகளை அளவுபடுத்தி உண்ணவேண்டும், மந்தப் பொருள்களை மிகுதியாக உண்ணலாகாது என்றெல்லாம் தம்பிக்கும் உனக்கும் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு அப்போதெல்லாம் என்மேல் வெறுப்பாக இருந்திருக்கும். இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள். பத்து ஆண்டுகள் இருந்து நீங்கிப் போகும் அழகை நாற்பது ஐம்பது ஆண்டுகள் நீட்டித்துக் காப்பாற்ற மக்களால் முடியும். ஆனால் அதற்கு முயற்சி வேண்டும், நெறி வேண்டும், அறிவு வேண்டும்.

உன் அன்புள்ள,

**வளவன்.**

# 5

அன்புள்ள தங்கை,

சிலர் பிறக்கும்போதே அழகாகப் பிறக்கவில்லையே என்று எழுதியிருக்கிறாய். அது எனக்கும் தெரிந்ததுதான். அழகு உடலை ஒட்டியது ஆகையால், தலைமுறை தலைமுறையாக வரக்கூடியது. அறிவு, பண்பு, ஒழுக்கம், பழக்க வழக்கம் முதலியவற்றில் உள்ள குறைகளை ஒருதலைமுறையிலேயே அடியோடு மாற்றிச் சீர்ப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் அழகு உடனே முழுதும் மாற்றிக்கொள்ள முடியாதது. நீ குறித்த ஆ. பிறவியிலே விழி மூக்கு இதழ் முதலியவை விகாரமாய் அமையப் பெற்றவள். என்ன செய்வது? அவள்குறை அல்ல. அவளுடைய பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் முரட்டு உழைப்பும், முரட்டு உணவும் கொண்டு வாழ்ந்தவர்கள். இவள் இப்போது நாகரிக வாழ்க்கை பெற்றிருக்கிறாள். இனி முரட்டு உழைப்பும் இல்லை; முரட்டு உணவும் இல்லை; ஆகையால் ஒரு சிறிது திருந்த முடியும். அழகுத் துறையில் முயற்சிக்குச் சிறுபயனாவது உண்டு. இவளுக்குப் பிறந்துள்ள குழந்தைகள் இவளைவிட அழகாக இல்லையா? அடுத்த தலைமுறையில் குறைகள் எவ்வளவோ தீர்ந்து போகும்.

ஏழைகள் சிலருக்குப் பிறவியிலேயே திறமை இல்லை என்று எழுதியிருக்கிறாய். நல்ல காலம்; சிலருக்கு என்று குறித்தாயே அதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். ஏழைகளுக்கு என்று பொதுவாகக் குறிக்காமல் விட்டாயே, அதற்காக மகிழ்கிறேன். 'சிலருக்கு' என்பதையும் நான் முழுமனத்தோடு ஒப்புக்கொள்ள முடியாது. ஏன் என்று கேட்பாய். இந்தச் சமுதாய அமைப்பைச் சுருங்கச் சொன்

னுல்தான் அது விளங்கும். வாழ்க்கையின் வாய்ப்பு இன்று சிலருக்குப் பிறப்பால் தானே அமைகிறது ; வேறு சிலர்க்கு எதிர்பாராத விபத்துப்போல் குருட்டுத்தசையாகக் கிடைக்கிறது ; விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்க்கு விடா முயற்சியின் பயனுக ஒருவேளை கிடைத்தாலும் கிடைக்கிறது. பெரும்பாலோரின் கதை என்ன ? பிறக்கும்போது நல்ல உடம்போடுதான் பிறக்கிருர்கள். ஆனல் திறமை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை ; திறமை பெற்றபிறகும் திறமையைக் காட்ட வாய்ப்பு இல்லை ; திறமையைப் புலப்படுத்திய பிறகும் அதைப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை. திறமையைப் பயன்படுத்திய பிறகும் வாழ்வதற்கு வாய்ப்பு இல்லை. இந்த நிலைமை வர வர மிகக் கெட்டுவருகிறது. ஒரு தலைமுறைக்குமுன் அலுவலகங்களில் கையாள் வேலை (ஆபீஸ் பியூன் வேலை) யில் இருந்த ஒருவன் தன் மகனைக் கல்லூரிவரையில் படிக்கவைத்தல் எளிதாக இருந்தது. இப்போது அங்கே மேற்பார்வையாளராக உள்ளவரும் தம் மகனைக் கல்லூரியில் படிக்கவைக்க முடியாமல் திணறுகிருர். படிப்பைப் பற்றி மட்டும் குறிக்கவில்லை. திறமை பெறுவதற்கு உள்ள மற்றத் துறைகளிலும் இந்தக் கொடிய நிலையே பெருகிவருகிறது.

நீ சொல்வதுபோல் பிறவியிலேயே திறமை அற்றவர்களாக இருக்கிறவர்கள் உண்டு. ஆனல் சிலர் அல்ல ; மிக மிகச் சிலரே. அவர்களின் மூளையிலேயே அந்தக் குறை இருக்கிறது. ஆயினும் அது குடும்பக் குறையும் அல்ல ; பரம்பரைக் குறையும் அல்ல ; தனிப்பட்ட ஆட்களின் உடம்பின் குறை. வாயாடிக் குடும்பங்களில் ஊமைகள் பிறக்கவில்லையா? அதுபோல் திறமையுள்ளவர்களின் குடும்பங்களிலும் அப்படிப்பட்ட முட்டாள்கள் பிறக்கிருர்கள். அதைக்கொண்டு ஏழைகள்மேல் குறைசொல்ல முடியாது.

நேர்மாருக எண்ணிப்பார். இன்றைக்கு ஆடம்பரமாக வாழ்வோர் அத்தனைப் பேருக்கும் திறமை நிறைந்திருக்கிறதா? திறமை இல்லாதபோதும் அவர்களுக்கு வாழ்க்கைக்கு உரிய வாய்ப்பு இருக்கிறதே!

நன்ருக வாழ்பவரின் வாழ்வைப் பறிக்கச் சொல்லவில்லை. வாழ வாய்ப்பே இல்லாதவர்களுக்கு வாய்ப்புத் தரச் சொல்கின்றேன்.

எண்ணமே உலகம்; உள்ளம் திருந்தின் உலகம் திருந்தும்; மனம் போல வாழ்வு; கருத்துக்களே ஆற்றல் மிக்க படைக்கலங்கள் – இவ்வாறு பேசுவன் எல்லாம் வெறும் பேச்சா? உண்மை என நம்பினல், திருந்திய முறையில் எண்ணுவோம்; திருந்திய உலகம் அமையும். இதைத்தான் நான் முன்னைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாக நினைக்கின்றேன்.

உன்னைப்போன்ற ஒருத்தி வயலிலும் கரம்பிலும் காட்டிலும் மேட்டிலும் பகலெல்லாம் உழைக்கிருள்; பொழுது போனதும் வீட்டுக்குத் திரும்பிச் சமைத்துத் தொல்லைப் படுகிருள். கணவனுக்கும் மக்களுக்கும் உணவு இட்ட பிறகு எஞ்சியதை அரைவயிறு உண்கிருள். கட்டுவதற்குப் போதுமான கந்தை இல்லை. எண்ணெய் தேடித் தலை வார நேரமும் இல்லை; காசும் இல்லை. கண்ணுடி எடுத்து முகத்தைப் பார்க்க வாய்ப்பு இல்லை. திருமணம் ஆவதற்கு முந்திய நாழிகையில் உடைந்த கண்ணுடி ஒன்றை எடுத்துப் பார்த்து மகிழ்ந்திருப்பாள். அவளுக்கு எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவதற்கு வழி இல்லை; நிகழ்காலத்தில் எதையும் தாங்கிக்கொள்ளும் நிலை இருக்கின்றது. சுத்தம், சுகாதாரம் இவை எல்லாம் அவள் அறியாத புதுச்சொற்கள். கலை, கருத்து இவை எல்லாம் அவளுக்குக் கனவைவிட அப்பாற்பட்டவை. அவள் உன்னைப் போன்ற தமிழ்ப் பெண்தான்; பெண்தான்.

நீ என்ன செய்கிறாய்? எதிர்காலத்தைப் பற்றி ஏங்குகிறாய்; நிகழ்காலத்தைக் குறித்துக் கவலைப்படுகிறாய். கலையுலகமே உலகம் என்கிறாய். சமையலறையை மேற்பார்வை பார்க்கிறாய்; எப்போதேனும் சிறு சிறு வேலையும் செய்கிறாய். வீட்டை விட்டு வெளியே சென்று பொழுதுபோக்குவதற்குத் திட்டம் போடுகிறாய். அதற்குப் போதிய வாய்ப்பு இல்லையே என்று ஏங்குகிறாய்.

உன்னைவிட உயர்ந்த படிகளில் வாழ்வோர் பலர் உள்ளனர். படிகளும் பலவகைப்பட்டனவாக உள்ளன. பெண்கள் சிலர் சமையலறையை எட்டிப் பார்ப்பதே இல்லை. பசிக்கு மருந்து தேடி வருந்துகிறார்கள். வீட்டில் உள்ள மோட்டார்க்கு ஏதேனும் உழைப்பு வேண்டுமே என்று கடற்கரைவரையில் போய்த் திரும்புகிறார்கள். தங்களைப் போன்ற மற்ற வீட்டுப் பெண்கள்மேல் பொறாமைப்படுகிறார்கள். அவர்களின் அழிவைப் பற்றிக் கற்பனை செய்து மகிழ்கிறார்கள். அந்தக் கற்பனையில் அவர்களின் வாழ்க்கைக் கலை முடிவடையுமாறு நாட்கள் கழிகின்றன.

இந்த நிலைமை யாருக்கும் நன்மை செய்யக் காணோமே. இது நீட்டிக்க வேண்டுமா?

நினைத்துப்பார். நம் வீட்டில் பாத்திரங்களைத் துலக்கி வேலை செய்கிறாளே, அவளும் உன்னைப் போன்ற பெண் தான். உனக்குமேல் ஐந்து ஆறு வயது பெரியவளாக இருப்பாள். மாதம் ஏழு ரூபாய்ச் சம்பளத்திற்குத் தன் வீட்டைவிட்டு அயலார் வீட்டிற்கு வந்து உழைக்கிறாள். வைகறையில் துயிலெழுகிறாள். (வேறு எந்த நாகரிகப் பெண்களால் முடியும்?) சொந்த வீட்டு வேலைகள் சிலவற்றைச் செய்கிறாள். தன் குழந்தைகள் எழுவதற்கு முன்பே, அவைகளுக்குத் தெரியாதபடி இங்கே வருகிறாள். இங்குள்ள வேலைகளைச் செய்கிறாள். ஏதாவது உணவு கிடைக்கும் என்று அவளுடைய குழந்தைகள் அவளைத் தேடிக்

கொண்டு இங்கே வருகின்றன. நம் அம்மா கொடுக்கும் பழைய சோற்றையும் காந்திப் போனதையும் கெட்டுப் போனதையும் குழந்தைகளிடம் கொடுத்து, அவைகள் உண்பதை மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு தன் காய்ந்த வயிற்றுடன் குடிசைக்குத் திரும்புகிருள்.

நீ பள்ளிக்கூடத்தில் மூன்ரும் வகுப்பில் படித்தபோது தெருக் கோடியில் முறுக்கு வாங்கித் தின்ருயே, நினைவிருக்கிறதா? அந்தக் கிழவி நாளெல்லாம் அந்தச் சின்ன அழுக்குக் கூடையை வைத்துக்கொண்டு கிழிச்சல் கோணியின்மேல் உட்கார்ந்து ‘ பெரிய வியாபாரம் ’ தொடர்ந்து செய்கிருள். அந்தக் காலம் முதல் இன்றுவரையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்துவருகிருள். கண்ணும் பார்வை மங்கிவிட்டதாம். ஆனல் தொழிலை விட முடியவில்லை. ஏன், தெரியுமா? நாள்தோறும் எவ்வளவு விற்கிருள். என்ன ஊதியம் கிடைக்கிறது, தெரியுமா? எண்ணிப் பார்த்திருக்கிருயா? நரைத்துத் திரைத்துப் பழுத்த அந்தஉடல் எங்காவது கட்டிலின்மேல் மெத்தென்ற படுக்கையில் படுத்துப் புரண்டு காலம் கழிக்காமல், வெயிலிலும் மழையிலும் காற்றிலும் பனியிலும் துன்பப்பட்டு, அரைமணி கால்மணிக்கு ஒருமுறை ஒரு சிறுவனுக்கோ சிறுமிக்கோ காலணு முறுக்கு விற்று, அதில் ஒரு பை ஊதியம் பெறப் பாடுபடுகின்றது! இவ்வாறு கிடைக்கும் சிறு ஊதியமான மூன்றணு நாலணு இல்லையானல் அந்த வற்றிய குடல் கஞ்சி இல்லாமல் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றதாம்.

தங்கியிருக்க நிழல் இல்லாமல், அடுப்பு மூட்ட இடம் இல்லாமல், மரத்தடியிலும் சாய்க்கடைக் கரைகளிலும் மானத்தோடு வாழும் தமிழ்ப்பெண்கள் எத்தனைப் பேர், தெரியுமா?

'மானத்தோடு' என்று குறிப்பிட்டேன். ஆம்; இவர்கள் மானத்தோடு வாழ்கின்றவர்கள். பிச்சை எடுக்கவில்லை, பிறர் பொருளை வௌவவில்லை, லஞ்சம் வாங்கவில்லை, பொய் வழக்காடவில்லை, விபசாரம் செய்யவில்லை; இது மான வாழ்வுதானே!

மானம் இழந்து வாழ்கின்ற பெண்களைப் பற்றி நான் குறிப்பிட வேண்டியதே இல்லை. பாத்திரம் துலக்கினாலும், முறுக்கு வேர்க்கடலை விற்றாலும், பிச்சைஎடுத்தாலும், வேறு என்ன செய்தாலும் சரி; மானத்தையும் விட்டு ஒழுக்கமும் கெட்டு வாழத் தொடங்குகின்ற பெண்கள் முன் குறித்தவர்களைவிட ஒரு சிறிது நன்றாகவே வாழ்கிறார்கள்! எல்லாம் நம் சமுதாயப் பெருமை!

எல்லாவற்றையும் விட, நீ என்னைப் பற்றியே குறிப்பிட்டு எழுதியிருக்கிறாயே. அதை வரவேற்கின்றேன். சீர்திருத்தக்காரனாக இருந்தும், பழைய நெறியே நல்லது சிறந்தது என நான் வற்புறுத்தியது உனக்கு வேடிக்கையாக இருந்தது என்கிறாய். வேடிக்கையா? உண்மையாகவா?

எந்த வகையில் பழைய நெறியைப் போற்றுகிறேன், எதில் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறேன் என்று எளிதில் பிரித்து அறியலாமே. தனிவாழ்க்கையில் பெரும்பாலும் பழைய நெறி நல்லது என்று அனுபவத்தால் அறிந்து போற்றுகிறேன். அதுவும் 'பெரும்பாலும்'தான்; முழுமையும் அல்ல. ஆனால் சமுதாய, பொருளாதார, அரசியல் வகைகளில் பெரும்பாலும் சீர்திருத்தம் வேண்டும். இவ்வகைகளில் முன்னோர்களின் வழியில் பல குறைகள் உண்டு. அதுவும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகு முன்னோர்களின் வழி நமக்கு உதவாததாகிவிட்டது. அதை மாற்றி அமைக்க முடியாத காரணத்தால்தான் இந்தத் துறையில் ஊழல்கள் பெருகிக்கொண்டு போகின்றன.

ஆனால் தனிவாழ்க்கையில் முன்னோர்களின் அனுபவம் சிறந்த அனுபவம். தனியாட்கள் பண்பட்டு உயர்வதற்கு அவர்களின் அறிவுரை இன்றும் பயன்படக் கூடியவை களாக உள்ளன ; அத்தகைய பண்பாடு இருந்தால் ஆணும் பெண்ணும், அல்லது நண்பனும் நண்பனும் சேர்ந்து பழகும் பழக்கம் சிறந்து விளங்க முடிகின்றது. அதனால் தான், முன் கடிதத்தில் அந்தப் பழைய நெறியைப் போற்றி எழுதியிருந்தேன்.

விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் ஒரு குடும்பமாகி விட்டது ; உலகத் தொல்லைகள் குடும்பத்தொல்லைகள் போல் ஆகிவிட்டன. அதனால் சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளில் சீர்திருத்தம் தேவையாக உள்ளது. ஆனால் தனிவாழ்க்கையில் விஞ்ஞானம் பெரிய மாறுதல் ஒன்றும் செய்யவில்லை. மனம் பழையபடியே உள்ளது ; குணங்கள் குற்றங்கள் பழையபடியே உள்ளன. புலன்கள் பழையபடியே உள்ளன ; விருப்பு வெறுப்பு சினம் மானம் பொறுமை பொறாமை காதல் துறவு முதலிய மனநிலைகள் பழையபடியே உள்ளன. அதனால் பழைய மருந்தே பயன்படும் என்று எழுதினேன். பழைய மருந்து அனுபவத்தால் தேர்ந்து போற்றப்பட்டது. ஆகையால் இன்றும் பயன்படும். உண்மையாகவே, முன்னோர்கள் தனிவாழ்க்கையில் சிறந்த வழியைக் கண்டு தெளிந்தவர்கள். ஆனால் பொதுவாழ்க்கையில் அவ்வாறு தெளிவு பெறவில்லை ; அதனால்தான் இதில்மட்டும் உலகம் பழைய போக்கை விட்டு விலகிச் செல்கின்றது.

இவ்வாறு பகுத்தறியாமல் கண்மூடித்தன்மையோடு இருவகையிலும் புதுமையை நாடிப் பழமையை வெறுத்து வாழ்ந்தால், பல தொல்லைக்கு ஆளாக நேரும் ; நேர்ந்து வருகின்றது.

திரு. தேவசுந்தரியின் தமக்கை முற்றிலும் புதுப் போக்காக இருந்தும் அன்பாக அமைதியாக இல்வாழ்க்கை நடத்தவில்லையா என்று கேட்டிருக்கிறாய். உனக்கு உண்மை முழுதும் தெரியுமா? அவள் முற்றிலும் புதுப்போக்கே என்பது உனக்கு எப்படித் தெரியும்? தன்னை அறியாமலே பழைய நெறியில் கணவனுக்கு விட்டுக்கொடுத்து அன்பாக நடக்கலாம். சிலர் பழமை என்ற பெயர் சொல்லாமல், புதிய வழி என்று நம்பிக்கொண்டு பழைய அறநெறியில் நடக்கின்றார்கள். இவளும் அப்படி நடப்பவளாக இருக்கலாம். அல்லது, முன் ஒரு முறை குறித்தபடி, கணவன் இவளுக்கு முழுதும் விட்டுக்கொடுத்து நடப்பவனாக இருக்கலாம். அப்படி யாராவது ஒருவர் தம் உரிமையை அடியோடு இழந்துவிட்டால், எவ்வளவு கொடியவர்கள் ஆனாலும் போராட்டம் இருக்காதே. உயிரற்ற, எதிர்ப்பு அற்ற ஒரு சிலையோடு வீட்டில் பல ஆண்டுகள் கழிப்பதில் என்ன அருமைப்பாடு இருக்கிறது? முழுதும் விட்டுக்கொடுத்த கணவன் சிலை போன்றவன், படம் போன்றவன். கவலை இல்லாமல், போராட்டம் இல்லாமல் அப்படிப்பட்டவனோடு ஒரு வீட்டில் வாழ்நாள் முழுதும் கழிக்கலாமே. ஆகையால் உண்மை அறியாமல், இவளுடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டி, பழமையை ஒதுக்கிவிடக் கூடாது.

உண்மையாகவே, ஒரு குடும்பத்தில் பழைய நெறியைப் போற்றாமல், உரிமையே முதன்மையாகக் கொண்டு இருவர் வாழ்வதாகவும், அவர்களின் வாழ்க்கை அன்பாக நடைபெறுவதாகவும் வைத்துக்கொள். அப்போதும் வேறொரு காரணம் இருக்கலாம். வியாபார முறையான பொருள்பற்றிய காரணம் இருக்கலாம். கணவன் பொருளில் அவ்வளவாகப் பற்று இல்லாதவனாக இருக்க, மனைவி ஆனவரையில் சேர்த்து வைப்பவளாக இருக்கலாம். அப்போது அவனோடு வாழ்வதால் மனைவிக்குப் பொருளாதார நன்மை இருக்கிறது

அல்லவா ? அல்லது, அவளோடு வாழ்வதால் செலவைச் சுருக்க முடிகின்றது என்ற காரணம் அவனுடைய மனத்தில் இருக்கலாம். இன்னும் அவளால் அவனுக்கும் அவனுல் அவளுக்கும் வரக்கூடிய செல்வத்தை எதிர்பார்த்து வாழ்வதாக இருக்கலாம். எல்லாம் அழகான வாணிக முறை. கோயில் கலையரங்கம் முதலான இடங்களைக் கைப்பற்றிக் கொண்ட பணம், இல்லறத்தையும் கைப்பற்றிக்கொண்டது என்று சொல்லவேண்டிய நிலை இது.

இப்படிப்பட்ட காரணங்கள் எவற்றிலும் அடங்காதபடி, இருவர் கூடி அன்பாக வாழமுடிகின்றது என்றே வைத்துக்கொள். அது விதிவிலக்காக, ஒரோவழி நடப்பது. விதிவிலக்கைப் பார்த்து நாம் வழி வகுத்தல் தகுமா ? செல்வக் குடும்பத்தில் பிறந்த ஊமையும் செவிடும் கவலை இல்லாமல் இன்பமாக வாழ்கிருர்களே என்று, நமக்கு அமைந்துள்ள பேச்சுத் திறனையும் கேட்கும் புலனையும் வெறுக்கலாமா ? நூருயிரம் குடும்பங்களில் இரண்டொரு குடும்பங்கள் ஆணவத்திற்கு இடையே அமைதியாக வாழ முடிந்தால், அவற்றைக் கண்டு பழைய அறநெறியைப் பழிக்கலாமா ?

அடுத்த வாரத்தில் அம்மா அங்கே வரப்போகிருர்கள். இங்கே ஓயாமல் உழைத்து உழைத்து அலுத்துப்போன உடம்புக்கு அங்காவது ஓய்வு இருக்கட்டும். அமைதியாகத் தங்கி ஓய்வு பெறுமாறு பார்த்துக்கொள்.

உன் அண்ணன்,

**வளவன்.**

# 6

அன்புள்ள தங்கை,

உன் கடிதம் பெற்றேன். அம்மா அங்கே வந்தும் ஓய்வாக இல்லை என்றும், இல்லாத வேலைகளை எல்லாம் தாமே ஏற்படுத்திக்கொண்டு உழைக்கிறார்கள் என்றும் எழுதியிருந்தாய். இதை நான் ஒருவாறு எதிர்பார்த்தேன் என்றே சொல்ல வேண்டும். உழைத்துப் பழகிய உடம்பு வாளா இருக்காது. மனித உடம்பு எதையும் பழக்கப் படுத்திக்கொள்ளும் என்றும், பழக்கமான பிறகு அதுவே அதற்கு இயற்கையாகிவிடும் என்றும் அறிஞர்கள் சொல் கிறார்கள். அம்மாவின் வாழ்க்கையில் ஓய்வில்லாத்தன்மை இப்படித்தான் இயற்கையாகிவிட்டது.

நம் தாய் மட்டும் இப்படி என்று எண்ணாதே. தாய் மார்களே பொதுவாக இப்படித்தான் இருக்கிறார்கள்.

ஒரு பெண் பெற்றோரின் மகளாக உள்ள வரையில் உரிமை மிகுந்தவளாக அரசிளங்குமரியாகவே வாழ்கிறாள். கணவனின் மனைவியாக வாழத் தொடங்கியதும் அரசியாக வும் அடிமையாகவும் மாறி மாறி வாழ்வதுபோல் விளங்கு கிறாள். தான் பெற்ற மக்களின் தாயாக வாழும்போது எல்லா உரிமைகளையும் உதறிவிட்டு அன்புருவாக உயர் கிறாள். பிடிவாதம் செய்யும் ஒரு பெண்ணை இயற்கை இப்படி மாற்றி மாற்றித் தியாகத்தின் திருவுருவாகச் செய்கிறது.

நம் அன்னையின் நிலை இப்போது இதுதான். அதனால் ஓய்வுவிரும்பும் மனப்பான்மையே இல்லாமல்போய்விட்டது.

இப்போது என் மனம் அம்மாவை நினைந்து அன்பாக உருகுகின்றது. ஆனால் அம்மா இங்கு வீட்டில்இருந்தபோது என் அன்புக்கு இடையே சிறிது வெறுப்பும் இருந்துவந்தது. பிரிந்து வாழும்போது வெறுப்பு மறைந்துபோய் அன்பு

வளரும் என்று முன் ஒரு கடிதத்தில் இல்வாழ்க்கையைப் பற்றி எழுதியபோது குறிப்பிட்டேன் அல்லவா? கணவன் மனைவிக்கு இடையில் மட்டும் அல்லாமல் தாய்க்கும் மகனுக்கும் இடையிலும் இது உண்மையாக விளங்குவதை இப்போது என் அனுபவத்திலேயே காண்கிறேன்.

என்னைப் போலவே அம்மாவின் மனநிலையும் இருக்கும் என்று நம்புகின்றேன். இங்கே இருந்தபோது, உன் அண்ணியின்மேல் வெறுப்பும், அதனால் என்மேலும் சிறிது வெறுப்பும் இருந்ததை அறிந்தேன். இப்போது எங்களைப் பிரிந்து உன்னிடம் வந்திருக்கும்போது, அந்த வெறுப்பு மறைந்திருக்கும். இயற்கையான அன்பு மிகுந்திருக்கும். பெரிய மகன் எப்படி இருக்கிறானோ, மருமகள் தனியாக என்ன செய்கிறாளோ என்று இப்போது அந்த அன்பான தாய்மனம் கசிந்துருகும் என எண்ணுகிறேன். இதைப் பற்றி நான் உனக்கு எழுதியதாக அம்மாவிடம் சொல்லாதே. பொறுமையோடு கவனித்துப்பார். மனம் இப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள். அதற்காகத்தான் எழுதினேன்—உன் ஆராய்ச்சிக்காக.

ஆராய்ச்சி! விஞ்ஞானத் துறையில் யாராவது ஒருவர் இருவர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தால் போதும். அதைப் பற்றி மேலும் ஆராயாமல் அந்த ஆராய்ச்சியின் பயனை எல்லாரும் பெறுகிறோம். வானொலிப் பெட்டியை எல்லாரும் பயன்படுத்துகிறோம். ஆனால் மார்க்கோனி செய்த அந்த ஆராய்ச்சியையே நாம் செய்து காலம் கழிக்கிறோமா? இல்லை. வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சி மட்டும் தனித்தனியாக ஒவ்வொருவரும் செய்ய விரும்புகிறோம். திருவள்ளுவர் ஆராய்ச்சி செய்து முடிவுகளை எழுதிவைத்திருக்கிறார். திருக்குறளை வீடுதோறும் பயன்படுத்தினால் போதும் என்று அமைவதில்லையே. ஒவ்வொருவரும் தனியாராய்ச்சிகள் நடத்திய பிறகே முடிவுக்கு வர

வேண்டுமா? விஞ்ஞானத் துறையில் கண்மூடி நம்பிக்கை! அறநெறியில் அவ்வப்போது ஆராய்ச்சிகள்!

ஆராய்ச்சி வேண்டாம் என்று கூறவில்லை. நாம் வாளா இருந்தாலும் மூளை வாளா இருப்பதில்லை. ஏதேனும் வேலை தேடுகின்றது. செய்யட்டும்!

பெரியம்மாவிடம் எனக்குச் சிறிது வெறுப்புத் தோன்றிய காரணத்தைக் கேட்டிருந்தாய். எழுதுகிறேன்.

பூசனிக்காய் போகுமிடத்தில் பொறுமையாய் இருந்தவன் எலுமிச்சங்காய் போகுமிடத்தில் தடிகொண்டு திரிந்தான் என்று சொல்வார்கள். பெரியம்மாவின் மனநிலையும் அப்படித்தான் இருக்கிறது. பத்தும் இருபதுமாகக் குடும்பத்தில் எவ்வளவோ வீண் செலவுகள் ஆகின்றன. நகையை அழித்து அழித்துச் செய்வதில் எவ்வளவு செலவாகின்றது! உடம்பைக் காப்பாற்றத் தெரியாமல் மருந்து தேடுவதில் எவ்வளவு பணம் போகிறது! இவற்றை எல்லாம் விட்டுவிட்டு, கூலிவேலை செய்தவனுக்கு மகன் ஓர்அணு இரண்டணு மிகுதியாகக் கொடுத்துவிட்டால், நாளெல்லாம் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பாள். சில பெண்களின் கழுத்தில் உள்ள நகையைப் பணமாக்கினுல் நாளொன்றுக்குப் பத்து ரூபாய் வட்டி கிடைக்கும். அவ்வளவு நஷ்டம் ஆக விட்டுவிட்டு, கூலிக்காரனுக்குப் பத்தணு தர மன்ருடுவார்கள். இன்னும் சிலர், வெளியூரில் குறைந்தவிலைக்குக் கிடைக்கிறது என்று துடைப்பம் செம்மண் போன்ற பொருள்களை, நாலணு ஆறணுவுக்கு வாங்கிக்கொண்டு, ரயில் நிலையத்திலிருந்து வீடுபோய்ச் சேரும்போது அவற்றைச் சுமப்பதற்கு ஏழுணு எட்டணு கூலி கொடுப்பார்கள். ஏதாவது கேட்டால், 'ஆமாம் போ' என்று தலை அசைத்து, 'சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால்பணம்' என்று பழமொழியும் சொல்வார்கள். உன் அண்ணி தன் சித்தியின் கதையை ஒருநாள் சொன்னுள். பாகப்பிரிவினையின்போது இரண்டு

தலையணை நின்றுவிட்டனவாம். பத்து ஆண்டுகள் வரையில் விடாமல் அவள் போராடிக்கொண்டே இருந்தாளாம். கடைசியில் அண்ணியின் அண்ணன் யாருக்கும் சொல்லாமல் அவளிடம் பத்து ரூபாய் கொடுத்து அந்தப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தானும். பெண்கள் பலரிடம் இந்தப் பண்பு காணப்படுகின்றது. ஆனல் நம் பெரியம்மாவிடமும் இந்தச் சிறுமை இருக்க வேண்டுமா என்றுஎண்ணி எனக்குவெறுப்பு வந்தது. இந்த வெறுப்புக்கும் ஒரு வகையில் காரணம், பெரியம்மாவிடம் எனக்கு உள்ள மதிப்புத்தான். ஊர்ப்பெண்கள் அறியாமையோடு இருக்கலாம், நம் பெரியம்மா அப்படி இருக்கக்கூடாது என்ற எண்ணம்தான் இப்படிச் செய்கிறது. உனக்கும் தெரியுமே! தம்பி ஏதாவது காய் வாங்கிவந்தாலும் பழம் வாங்கிவந்தாலும் பொருள் வாங்கிவந்தாலும், விலைகூடுதல் என்றும் கடைக்காரர் ஏமாற்றிவிட்டார்கள் என்றும் எந்நேரமும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார். நம் வருவாய் என்ன, எவ்வளவு செலவாகிறது, அதில் இந்த வீண் செலவு எத்தனையில் ஒரு பங்கு என்று ரூபாய் அணு பை கணக்கிட்டுப் பார்த்துப் பழகினுல் இந்தச் சில்லறைமனம் போய்விடும். நான்கு பை போனுலும் நான்கு அணு போனுலும் நான்கு ரூபாய் செலவானுலும் எல்லாவற்றிற்கும் ஒரே அழுகையாய் நாளெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் வெறுப்பு வராதா? நான்கு பைசா போனுல் போகட்டும், நான்கு அணு போகாமல் காத்துக்கொள்வேன் என்று வாழ்க்கை நடத்தினுல் போதாதா? வீணுவதற்கு என்று ஒரு சிறு பகுதியை ஒதுக்கிவைத்து வியாபாரம் செய்யும் ஆங்கிலேயரின் முறையை ஒவ்வொரு குடும்பத் தலைவியும் கற்க வேண்டும் என்பது என் ஆவல்.

இன்னொரு குறையும் பெரியம்மாவிடம் அடிக்கடி கண்டிருக்கிறேன். அதுவும் மற்றப் பெண்கள் பலரிடம்

உள்ளதுதான். ஆனாலும் எனக்குப்பிடிக்கவில்லை. தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ ஏதாவது ஒரு துன்பமோ குறையோ நேர்ந்துவிட்டால், பெரியம்மாவின் மனம் நாளெல்லாம் அதையே நினைத்து நினைத்துக் கவலைப்படு கின்றது. அடுத்த கடமைகளில் மனம் ஈடுபடாமல் அதையே நினைத்துச் சோர்ந்திருக்கிறார். உணர்ச்சி மிகுந்தவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்றும், பெண்களே பொது வாக உணர்ச்சி மிகுந்தவர்கள் என்றும் நீ காரணம் சொல் வாய். ஆனால், அந்தக் காரணத்தைச் சொல்லிக்கொண் டிருந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியுமா? நோயின் பெயரையும் காரணத்தையும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் நோய் தீர்ந்துவிடுமா? இல்வாழ்க்கை என்பது முன்காலத்தில் ஒரே பொருளை விற்கும் வெல்ல மண்டி போல் இருந்தது. நாகரிகம் பலவகையில் கடமை களைப் பெருக்கியுள்ள இந்தக் காலத்து இல்வாழ்க்கை பலசரக்குக் கடைபோல் ஆகிவிட்டது. பல பொருள்களையும் கவனித்து விற்கும் திறமை இல்லாவிட்டால் பலசரக்குக் கடையில் வாழ முடியுமா? நாம் பலருடைய வாழ்க்கையில் கலந்திருக்கிறோம்; பலர் நம்முடைய வாழ்க்கையில் கலந்திருக் கிறார்கள். ஆகையால் கடமைகள் பலவாகிவிட்டன. இந்தக் காலத்தில் ஒரு துன்பத்தையோ ஒரு குறையையோ எண் ணித் தலைமேல் கைவைத்து உட்கார்ந்துவிட்டால், யாரும் முன்னேறமுடியாது. அவர்களை நம்பியவர்களும் கடைத்தேற முடியாது. நன்மை தீமை இன்பம் துன்பம் குணம் குற்றம் நிறை குறை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு, எதற் கும் தயங்கி நிற்காமல் ஓடுகின்ற கடிகாரம் போல் கடமை களை அஞ்சாமல் செய்கின்றவர்கள்தான் இந்தக் காலத்தில் தலைமைப்பதவிக்குத் தக்கவர்கள். குடும்பத் தலைவியும் இப் படி இருந்தால்தான் வாழ்வு நன்றாக நடக்கும். யாராவது தன்னைக் குறைகூறினார்கள் என்றால், அதையே எந்நேரமும்

எண்ணிக்கொண் டிருப்பது, யாராவது நோயால் வருந்து கிறார்கள் என்றால் எந்நேரமும் அவர்களையே நினைந்து உருகுவது : இவ்வாறு வாழ்வது கூடாது.

இவ்வாறு தேங்கும் உணர்ச்சியை வளர்ப்பதால் என்ன ஆகிறது, தெரியுமா? ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும் போது, அல்லது ஓர் எண்ணத்தில் மூழ்கியிருக்கும்போது, குழந்தைகள்வந்து ஏதாவது கேட்டால் உடனே அவர்களின் மேல் சீறிவிழுவார்கள். குழந்தைகள் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பிடிவாதம் செய்தாலும், பேச்சின்போதும் சிந்தனை யின்போதும் குறுக்கிட்டாலும், உடனே அவற்றின்மேல் எரிந்துவிழுவார்கள். இவைகள் எல்லாம் கெட்ட பழக்கங் கள். இந்த எரிச்சல்மனம் மிகப் பொல்லாதது. வளரும் குழந்தைகள் இந்தச் சீறுதலையும் எரிதலையும் எளிதில் கற் றுக்கொள்வார்கள். பெற்றோரையும் மற்றவர்களையும் பின் பற்றி, அவர்களைப் போல் நடப்பதுதானே குழந்தைகளின் மனவளர்ச்சிக்குக் காரணம். சீறிவிழும் எரிச்சல்மனம் உடை யவர்களைப் பார்த்து வளரும் குழந்தைகள் வேறு என்ன கற்றுக்கொள்வார்கள் ? இந்த உணர்ச்சிக் கொப்புளங்கள், குழந்தைகளின் உள்ளத்திலும் கிளம்பி, உள்ளத்தின் அழகைக் கெடுக்கும். ‘தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்னும் பழமொழியின்படி, இங்கே கற்றுக் கொள்ளும் சீறுதலும் எரிந்துவிழுதலும் குழந்தைகளின் வாழ்நாள் முழுதும் இருந்து கெடுக்கின்றன.

பெரியம்மாவைப் போலவே உன் அண்ணிக்கும் இந்த எரிச்சல்மனம் வந்துவிட்டது. சிலவேளைகளில், நான் படிப்பறையில் இருக்கும்போது, கூடத்தில் உன் அண்ணி குழந்தைகளோடு கொஞ்சிக்கொண் டிருப்பது கேட்கும் ; அதைக்கேட்டுக்கொண்டே நான் ஏதேனும்படித்துக்கொண் டிருப்பேன். திடீரென்று அவளுடைய குரல் கிரீச்சென்று சூடு ஏறும் ; கடுமையின் எல்லையிலிருந்து சில சொற்கள்

பிறக்கும்; போலிஸ் ஆட்சி நடைபெறும்; பெரிய குழந்தையின் வாய் அடங்கும்; சின்ன குழந்தை அழுது இசைகூட்டத்தொடங்கும். படிப்பறையில் இருந்து கேட்டபடியே வருந்துவேன். மருத்துவ நிலையத்தில் வயிற்றெரிச்சலுக்கு மருந்துகிடைப்பதுபோல் இந்த மனஎரிச்சலுக்கு எங்கேனும் மருந்து கிடைக்காதா என்று எண்ணுவேன்.

உன் அண்ணியைப் பற்றி இவ்வாறு சொல்வதால், எங்கள் வாழ்க்கையில் ஏதோ கோளாறு என்று எண்ணிவிட வேண்டாம். இரண்டுகத்தரிக்காயில் புழுவைக் கண்டதனால், வாழ்நாள் முழுதும் கத்தரிக்காய் உண்ணு நோன்பு மேற்கொள்ளும் பைத்தியம் எனக்கு இல்லை. அவளிடம் சில குறை கண்டதனால், குணங்களை மறந்து வாழ்க்கையை வெறுக்கும் அறியாமை என்னிடம் இல்லை என்று நம்பு.

இந்தச் சிற்றமும் எரிச்சலும் பரம்பரைச் சொத்துப் போல் தொடர்ந்து வரவேண்டுமா, பொறுமையும் இன் சொல்லும் இப்படித் தலைமுறைப் பண்புகளாக அமையக் கூடாதா என்பதுதான் எனக்குக் கவலை.

எரிச்சல்மனம் என்ன செய்கிறது, தெரியுமா? ஒரு டெலிபோன் இருப்பதாக வைத்துக்கொள். அதில் ஏதோ கோளாறு ஏற்பட்ட காரணத்தால், மற்றவர்கள் பேசும் செய்திகள் மட்டும் தெளிவாகக் கேட்கின்றன என்றும், நாம் சொல்லும் சொற்கள் மற்றவர்களுக்கு எட்டவில்லை என்றும் வைத்துக்கொள். அப்போது நமக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்? மனஎரிச்சல் உடையவர்கள் தம் ஆத்திரத்தை மட்டும் நம்மிடம் கொட்டிவிட்டு நம் அறிவுரைகளுக்குச் செவி சாய்க்காதிருந்தால் அப்படித்தான் துன்பமாக இருக்கிறது.

கணவர் வெளிவேலை முடிந்து மாலையில் வீட்டிற்குத் திரும்பும் நேரமாக இருக்கும். வீட்டில் மனைவி ஏதோ ஒரு குறையால் (குழந்தைகளாலோ மற்றவர்களாலோ

ஏற்பட்ட குறையால்) எரிச்சலோடு வருந்திக்கொண்டிருப்பாள். கணவன் வந்து, கைகால் அலம்பி, களைப்புத் தீர்ந்து, உணவும் முடித்து மகிழ்ந்தபிறகு, அந்தக் குறையை அமைதியாகச் சொல்லித் தெரிவிக்கலாம். ஆனால் அவ்வளவு நேரம் அதை மனத்துக்குள்ளேயே வைத்துப் பொறுத்துக்கொண்டிருக்க அவளுக்கு ஆற்றல் இல்லை. வலிமை இல்லாத நோயாளி போன்றது அவளுடைய மனம். பேச்சிலும் பதைப்பிலும் வீரமும் வலிமையும் இருப்பது போல் தோன்றுமே தவிர, உண்மையாகப் பார்த்தால் அது ஒன்றையும் தாங்க முடியாத கோழைமனம் ஆகும். வெளியே சென்றிருந்த கணவன் அங்கே தொழில்வகையில் பிறதுறையில் என்ன என்ன தொல்லைகள் பட்டு வருகிறானோ என்று கணவனுடைய மனநிலையை எண்ணிப் பார்க்கும் கடமையுணர்ச்சியும் அந்த மனத்துக்கு இருப்பதில்லை. கணவன் வீட்டுக்குள் வருகின்ற காட்சியைப் பார்த்ததும் தன் குறையைக் கக்கிவிடத் தொடங்குகிறாள். கணவன் வீட்டிற்குள் கால்வைத்தானோ இல்லையோ கடுமையான குரலே கேட்கின்றது. வீடு என்றால் வெளியுலகத் தொல்லைகளுக்கு விடுதலையான நிலையம் (வீடு — விடுதலை) என்று நம்புகின்ற கணவன் " இதுதானா வீடு ? குடும்பம் என்றால் இப்படித்தானா ?" என்று வருந்துகின்றான். இல்வாழ்க்கை என்றால் இன்பவாழ்க்கை என்று எண்ணி வாழ்வை அமைத்துக்கொண்ட அவனுடைய நெஞ்சில் ஏமாற்றம் அரும்புகின்றது. மனைவியின் குறையைக் கேட்டுக்கொண்டே, " இவ்வளவு பொழுதோடு ஏன் வீட்டுக்குத் திரும்பினேன் ? இன்னும் சிறிது நேரம் வெளியே எங்கேயாவது பொழுதுபோக்கிவிட்டு வந்திருக்கலாமே " என்று எண்ணுகின்றான். பிறர்மனநிலை அறியாமல் தன் மனநிலையை மட்டும் கொட்டுகின்ற இந்த ஒருதுறை டெலிபோனின் அனுபவம் அவனுடைய

மனத்தை மாற்றுகின்றது. அடுத்த நாட்களில் வெளியே பொழுதுபோக்கிவிட்டு நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பு கிருன். வெளியே பொழுதுபோக்குவதற்கு நல்ல நண்பர் கள் கிடைத்தால், கவலைப்பட வேண்டிய நிலைமை இல்லை. பொழுதுபோக்கத் தீய நண்பர்களோ, தீய பழக்கங்களோ, இன்னெருத்தியின் உறவோ கிடைத்துவிட்டால், மனைவி யின் குறை வாழ்நாள் குறையாகவே வளர்ந்துவிடும்.

இப்படிப்பட்ட மெலிந்த மனம் — எரிச்சல்மனம் — உடையவர்கள்தான், குழந்தைகள் சிறு தவறு செய்தாலும் வாய் நோக வைது, கை நோக அடிக்கிருர்கள். குழந்தைகள் ஒரு தவறும் செய்யவேண்டியதில்லை. அவர்களிடம் போய் இரண்டு மூன்று முறை ஏதாவது கேள்விகள் (அறிவு வளர்ச்சிக் கேள்விகள்) கேட்டால்போதும். சீறிவிழுவார் கள். அவர்கள் யாருடனுவது பேசிக்கொண்டிருக்கும் போதாவது, ஏதாவது வீண் சிந்தனையில் மூழ்கியிருக்கும் போதாவது குழந்தைகள் பல முறை கேட்காமல் ஒரு முறை கேட்டாலும் போதும்; சீற்றம் பொங்கிவரும்; முகம் சிவக்கும்; வாய் துடிக்கும். ஆனுல், இவர்களின் முதல்கடமை அந்த வெறும் பேச்சும் அல்ல; வீண் சிந்தனை யும் அல்ல. அவர்களின் பேச்சைவிட, சிந்தனையைவிட, வளரும் குழந்தைகளின் வளர்ச்சிக் கேள்விகள் எவ்வளவோ உயர்ந்தவை! எவ்வளவோ சிறந்தவை!

உணர்ச்சி மிகுந்தவர்கள் பலர் இப்படித்தான் ஒரு துறை டெலிபோனுக இருக்கிருர்கள். தம் மனநிலையை எப்படியாவது பிறரிடம் கொட்டிவிடுகிருர்கள். ஆனுல் பிறருடைய மனநிலையை அறிய முயல்வதே இல்லை. குடும் பத்தில் ஆத்திரம் சுடுமூஞ்சித்தன்மை முகங்திருப்பல் இவைகள் தலைகாட்டாமல், விளையாட்டு மகிழ்ச்சி நல்ல குறும்பு இவைகள் விளங்கவேண்டுமானுல், ஒருவரும் இப்படி ஒருதுறை டெலிபோனுக இருக்கக் கூடாது.

குடும்பத்தில் இப்படி ஒருவர் இருந்தாலும், குடும்பம் பாழ்படுகிறது ; குழந்தைகளின் வேடிக்கை விளையாட்டு முதலியவைகளும் அடங்கிப் போகின்றன. குழந்தைகளால் வீடு இன்ப உலகமாக அமையும் என்பதற்கு மாருக, போலீஸ் அமுலும் இராணுவ ஆரவாரமும் அங்கே இடம் பெறுகின்றன ; அடுத்தாற்போல் இராணுவ அடக்குமுறையின் தொடர்ச்சியாக விளையும் குழப்பங்களும் கொடுமைகளும் குழந்தைகளின் சூழலிலும் விளைகின்றன.

குழந்தைகளுக்கு அறநூல்களைத் திணிப்பதைவிட, அறிவுரைகளைக் கூறுவதைவிட, அவர்கள் பின்பற்றத் தக்க வழியில் நாம் வாழ்வதுதான் நல்லது என்று உளநூல் தெளிந்த அறிஞர்கள் கூறுவார்கள். அறவுரைகளும் அறிவுரைகளும் வற்புறுத்தி ஊட்டும் உணவு போன்றவை ; அவை நன்ருகச் செரிப்பதில்லை. பெரியோரின் நடக்கை அப்படி அல்ல ; குழந்தைகள் தாமே விரும்பி உண்ணும் பழங்கள் போன்றது அது. அது எளிதில் உள்ளத்தில் பதிந்துவிடும் என்பார்கள். ஆகவே, பெண்கள் குளிர்ந்த உள்ளத்தோடு மலர்ந்த முகத்தோடு இனிய சொற்களோடு குழந்தைகளிடம் பழகுவார்களானல், அதுவே குழந்தைகளுக்குக் கற்பிக்கும் சிறந்த கல்வியாகும். அதுவே பெரிய தொண்டு ; எத்தனையோ பேரைத் திருத்தும் ஒப்பற்ற தொண்டு ; பத்திரிகைகளும் கட்சிகளும் புகழ வேண்டாத அரிய தொண்டு.

இவைகள் எளிதில் திருத்திக்கொள்ளக்கூடிய குறைகள். நீ இத்தகைய குறைகளுக்கு இடம்தராமல், இனியவாழ்க்கை நடத்து ; உன்னைச் சுற்றியுள்ள பெண்கள் உன்னைப் பார்த்துத் திருந்தும்படியாக நல்ல வாழ்க்கை நடத்திக்காட்டு. உலகத்திற்கு இந்த ஒரு தொண்டு செய். அது போதும்.

உன் அன்புள்ள,
வளவன்.

# 7

அன்புள்ள தங்கை,

முந்திய கடிதம் பெண்களுக்கே அறிவுரை சொல்வது போலவும், பெண்களிடமே குறை பல காண்பது போலவும் இருப்பதாக எழுதியிருக்கிருய். என் நோக்கம் அப்படிப் பட்டது அல்ல. நான் கடிதம் எழுதுவது உனக்கு ; உன் கணவருக்கு அல்ல. அதனுல்தான் ஆண்களின் குறைகளைக் குறித்து விளக்கமாக எழுதவில்லை.

குறைகள் எல்லோரிடத்திலும் உண்டு ; ஆண்களிடத் திலும் உண்டு. உனக்கு எழுதிய கடிதங்களை வைத்துக் கொண்டே அவற்றை நீ கண்டறியலாம். ஒன்று பார். பெண்கள் பலர் பிறருடைய மனநிலை அறியாதவர்களாய்த் தம் உணர்ச்சியை மட்டும் கொட்டிவிடுகிருர்கள் என்று முன்னைய கடிதத்தில் எழுதியிருந்தேன். ஆண்களும் பலர் அவ்வாறு இருக்கிருர்கள் என்பதைச் சேர்த்து எண்ணிக் கொள். மனைவியின் மனநிலை அறியாமல் துன்புறுத்தி வாழும் கணவன்மார் பலர் இருக்கிருர்கள். அவர்களும் ஒருதுறை டெலிபோன்கள்தான். ஆனல், வெளியுலகத்தில் அலுவலகத்து அதிகாரிகளிடம், தலைவர்களிடம், மேற் பார்வையாளரிடம் அடங்கித் தொழில் செய்து பழகும் காரணத்தால், ஆண்கள் பலர் திருந்த முடிகின்றது ; அதி காரிகளிடம் அடங்கி நடக்காவிட்டால் வாழ்க்கையே போய் விடும் என்ற அச்சம் எந்நேரமும் இருந்துவருவதால், அவர் களில் பலர் திருந்திவிடுகிருர்கள். பெண்கள் பலர் இப்படிப் பட்ட வெளியுலக அனுபவம் இல்லாதவர்கள் ; ஆகையால், திருந்துவதற்கு வாய்ப்பு அற்றவர்களாக இருக்கிருர்கள்.

நான் எழுதும் கடிதங்களில் அந்தக் கருத்துடனும் எழுதவில்லை. பொதுவாகவே மனிதர் கூடி வாழும்

வாழ்க்கைக்கு என்னென்ன நல்ல பண்புகள் வேண்டும், என்னென்ன தீய பண்புகள் ஆகாதவை என்ற அடிப்படையைக்கொண்டே எழுதுகிறேன். அண்ணன் – தம்பி, அக்கா – தம்பி, அண்ணன் – தங்கை, அக்கா – தங்கை, அவன் – இவன், அவள் – இவள் என யார் இருவர் சேர்ந்து பழகுவதாக இருந்தாலும், இந்த நல்ல பண்புகள் இருந்தால், அன்பான பழக்கமாகப் பயனுள்ள முறையில் நீடிக்கும். ஆனால் இவர்கள் எல்லோரையும் விட நெடுங் காலம் நெடுநேரம் ஒரே இடத்தில் இருந்து பழகும் பொறுப்பு, மனைவி – கணவன் என்ற நிலையில் உள்ள இருவர்க்குத்தான் அமைந்திருக்கிறது. ஆகையால்தான் இந்த இருவர்வாழ்க்கையைப் பற்றிமட்டும் நம் முன்னோர் கள் மிகுதியாக எண்ணிப்பார்த்து, இல்லறம், இல்வாழ்க்கை, கற்பு முதலான பெயர்களால் பல அனுபவ உண்மைகளை அறிவுறுத்தியுள்ளார்கள். இந்தப் பொதுநோக்குடன் நான் எழுதும்போது, பெண்களைமட்டும் குறை சொல் கிறேன் என்று கருதுவதற்கே இடம் இல்லை.

எடுத்துக்காட்டாக ஒன்று சொல்கிறேன். நண்பர் செல்லப்பாவின் மகளுக்குத் திருமணம் நடந்தது உனக்குத் தெரியுமே. திருமணத்தன்று மாலை நான் போயிருந்தேன். அப்போது நண்பர் என்னை வரவேற்று நேராக மகளிடம் அழைத்துக் கொண்டுபோய், “குழந்தையை உன் வாயால் வாழ்த்து அய்யா. நல்ல அறிவுரையும் சொல்” என்றார். நான் அப்போது அந்தப் பெண்ணை நோக்கி இந்த அறிவுரை சொன்னேன். “அம்மா! நீ கணவனுடைய மனம் அறிந்து நடந்துகொள்வதில் வல்லவளாக இருக்கவேண்டும். மனம் தான் வாழ்க்கை. மனம் அறிந்து மகிழ்விக்கத் தெரியாத பெண்கள், அழகு பண்பு திறமை எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாந்து துன்புறுகிறார்கள். அழகும் பண்பும் திறமையும் குறைவாக இருந்தாலும், மனம் அறிந்து

நடக்கத் தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறார்கள். கணவனுடன் வீட்டில் வாழும் வாழ்க்கையைப் பற்றி மட்டும் தெரிந்திருந்தால் போதாது. கணவன் செய்யும் தொழில், அந்தத் தொழிலைப் பற்றிய விளக்கம், சூழ்நிலை, போக்கு எல்லாம் அறிந்துகொள்ள வேண்டும். கணவனுடைய துறை எதுவாக இருந்தாலும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். கணவன் புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் உள்ளவராக இருந்தால், நீயும் அவற்றைப் படித்துத் தெரிந்துகொள். கணவனுக்கு அரசியலில் ஆர்வம் இருந்தால் நீயும் தெரிந்துகொள் " என்றேன். இதை வைத்துக் கொண்டு, ஆண்கள் அப்படி மனைவியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என்று நான் எண்ணுவதாகச் சொல்லமுடியுமா? முடியாதே. நண்பர் அருளப்பரின் தம்பிக்கு நான் சொன்னது என்ன தெரியுமா? அவனுடைய மனைவி இசையிலும் ஓவியத்திலும் ஆர்வம் உடையவள் என்று அறிந்தேன். அதனால் அவனும் அந்த இரண்டு கலையிலும் பயிற்சி பெறவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னேன். அவன் இரண்டையும் கற்றுக் கொள்ள முடியவில்லை என்று, இசைக் கலையை மட்டும் கற்றுக்கொண்டான். அது ஓரளவுக்கு நன்மையாகும். இல்லையானால், மனைவி அவனோடு பழகும் பழக்கத்தில் ஒரு பகுதி சுவையற்றதாகப் போய்விடுமே. அவளுக்கு மிக விருப்பமான அந்தக் கலைகளைப் பற்றிப் பேசும் பேச்சுத் தானே சுவை மிகுந்ததாக இருக்கும்? இப்படித்தான், நான் எதைச் சொன்னாலும், இருபாலார்க்கும் பொதுவாகச் சொல்வதாகவே எண்ணிக்கொள்.

இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். வாழ்க்கையில் பலர் கெடுவதற்குக் காரணம் விதிகளைப் பற்றி எண்ணாமல் விதிவிலக்கானவைகளைப் பற்றி எண்ணுவதேயாகும். கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரின்

துறையும் ஆர்வமும் அறிந்துகொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டேன் அல்லவா? இது பொது விதி. நீ விதிவிலக்கான ஒரு குடும்பத்தைப் பார்த்துவிட்டு, அங்கே இசை இன்னது என்று அறியாத கணவனும் இசையில் தேர்ந்த மனைவியும் கூடி ஒற்றுமையாக வாழ்வதைக் காட்டாதே. அளவறிந்து உண்க என்று திருவள்ளுவர் கூறுகிறார். பெருந்தீனி தின்கின்ற ஒருவன் நோய் இல்லாமல், மருந்து தேடாமல் வாழ்வதை எடுத்துக்காட்டி அந்தக் குறள் பொருந்தாது என மறுக்க முடியுமா? ஆகையால் வாழ வழி நாடுகின்றவர்கள் எப்போதும் விதிவிலக்குகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளக்கூடாது. இதை எழுதும்போதே எனக்குச் சிலப்பதிகாரம் நினைவுக்கு வருகின்றது. அன்பும் இரக்கமும் அருளும் கொடையும் மிகுந்தவனாகிய கோவலனுடைய உள்ளம் இசையிலும் கூத்திலும் எவ்வளவு ஆர்வம் உடையதாக இருந்தது. இதைக் கண்ணகி உணர்ந்து, அந்தக் கலைகளைத் தானும் கற்றிருந்தால், கணவனுடைய உள்ளம் கலையரசியாகிய இன்னொருத்தியை நாடாதவாறு தடுத்திருக்கக் கூடுமே என எண்ணுகிறேன்.

விதிவிலக்குகளாக உள்ள வாழ்க்கைகள் எனக்கும் எவ்வளவோ தெரியும். வாழ்க்கையில் பண்பாடும் உறுதியும் நிறைந்தவர்கள் எந்த நிலையிலும் எப்படியும் சேர்ந்து வாழ முடியும். ஆனால் பண்பாடும் உறுதியும் நிறைந்தவர்களாக எல்லாரும் இருக்க முடிகின்றதா? முடியுமா? குறைக்கு இடையே முயன்று முன்னேறுவதுதானே பெரும்பாலோருடைய நிலையாகவும் கடமையாகவும் உள்ளது?

மனைவியர் சிலர் தம்முடைய ஆர்வம் என்று ஒன்று கொள்ளாமல், எதையும் மறந்து கணவனுக்குத் தொண்டு செய்வதில் இன்பம் காண்கின்றனர். மற்றவர்கள் தம்முடைய ஆர்வமான கலை முதலியவற்றை இறுதிவரையில் மறப்பதே இல்லை. கணவன்மாரிலும் அப்படியே

சிலர் வீட்டிற்குள் நுழைந்ததும் தம் தொழில் துறை முதலியவற்றை மறந்துவிடுகின்றனர். மற்றும் சிலர், அவற்றையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட பேச்சைக் கேட்டுச் சுவைபடச் செய்தால்தானே மனைவி கணவனை மகிழ்விக்க முடியும்?

ஆண்கள் இருவகைப்படுவர். சிலர் தம்முடைய தொழில் தவிர வேறு எதிலும் தலையிடாமல், அக்கறையும் கொள்ளாமல் வாழ்வார்கள். அவர்களுடைய மனைவியர்க்குத் தொல்லை இல்லை. மனைவியர் என்ன காய் சமைத்துப் போட்டாலும் பேசாமல் உண்பார்கள்; என்ன உடை உடுத்து அலங்கரித்துக்கொண்டாலும் கேட்கமாட்டார்கள்; எந்தப் பொழுதுபோக்கும் நட்பும் வைத்துக்கொண்டாலும் தலையிடமாட்டார்கள். அதனால் அவர்களை மணந்துகொண்ட பெண்கள் கவலைப்படாமல் வாழலாம்.

மற்றொரு வகையான ஆண்கள் தம்முடைய தொழிலையும் செய்துவிட்டு, வேறு எந்தத் துறையிலும் முன்வந்து நிற்பார்கள். சமையல் வகையில் தலையிட்டு இது நன்றாக இருக்கிறது, இது அப்படி அல்ல என்று ஆராய்ந்து கொண்டிருப்பார்கள். இந்த உடை நல்லது, இது பொருந்தாது, இந்த அலங்காரம் கண்ணுக்கு அழகாக இல்லை என்று குறுக்கிடுவார்கள். இவர்களோடு பழகாதே, இதில் ஈடுபடு, அதில் வேண்டியதில்லை என்று முன்நின்று தடுப்பார்கள். உடம்பில் சுறுசுறுப்பும் உழைக்கும் திறனும் மிகுதியாக இருப்பதால் இவர்களால் அரை நாழிகை நேரமும் வாளா இருக்க முடியாது. எதிலும் தலையிட்டு எதையாவது செய்துகொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை மணந்துகொண்ட பெண்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும்; பொறுமையோடு ஒத்துழைத்து அன்பு

செலுத்த வேண்டும். முதலில் பொறுப்பது தொல்லையாக இருந்தாலும், நாளடைவில் பயன் தரும். பொறுத்தவர் பூமி ஆள்வார் என்று அம்மா அடிக்கடி சொல்லும் பழமொழி உனக்கு நினைவிருக்கும். அந்தப் பழமொழி 'செவி கைப்பச் சொல் பொறுக்கும்' நாட்டுத் தலைவரைப் பற்றியது. வீட்டுத் தலைவியரில் பொறுத்தவர் வீடு ஆள்வர் என்பது உண்மை. கணவனுடைய உள்ளத்தை நாளடைவில் தன் அன்பால் கவர்ந்துவிட்ட பெண்தானே வீட்டின் அரசி?

பிறர்உள்ளம் அறிந்து நடப்பது ஓர் அரிய கலை. பெண்ணுக்கு அது கட்டாயம் வேண்டும் என்று நான் எண்ணும்போது, அந்தக் கலையால் வாழ்க்கையில் வெற்றி பெற்ற சிலர் நினைவுக்கு வருகிறார்கள். நாடு அறிந்த ஒருவரைப் பற்றி இங்கே குறிக்கின்றேன். அவர் யாரையேனும் தம் வீட்டிற்கு விருந்தினராக அழைத்துச் சிறப்பிக்க எண்ணினால், அதற்கு முன்பே அந்த விருந்தினர்க்கு விருப்பமான உணவு, அவர் விரும்பும் காய்கறிகள், அவருடைய பழக்க வழக்கங்கள் முதலியவை பற்றி வேறு தக்க ஆட்கள் வாயிலாகக் கேட்டுத் தெரிந்துகொள்வாராம். விருந்தினர் விரும்பும் காய்கறிகளை அவர்க்கு விருப்பமான முறையில் செய்து விருந்திட்டு மகிழ்விப்பாராம். அதனால், பகைவரும் பகையை மறக்கும்படியான அளவிற்கு அவர் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து மிக உயர்ந்து விளங்கினார். உள்ளம் அறிந்தொழுகும் கலையாகிய இதன் சிறப்பை விளக்குவதற்காகவே இதைக் குறிப்பிட்டேன்.

இந்த அறிவுரைக்கும் ஓர் எல்லை உண்டு. அதை மறந்துவிடாதே. அதாவது, உள்ளம் அறிந்தொழுகும் போது, ஒரு துறையில் கணவன் விருப்பத்திற்கு முற்றிலும் இணங்கி நடப்பது குடும்பத்திற்குத் தீமையாக இருந்தால், அப்போது இந்த அறிவுரையைக் கடந்து

வாழ வேண்டும். கணவனுக்குக் கத்தரிக்காய் விருப்பம் என்ருல், அதையே கறியாக்கலாம் ; கத்தரிக்காய் வறுவல் விருப்பம் என்ருல், அதை அவ்வாறே செய்யலாம். ஆனுல் அதுவே அவருடைய உடல்நலத்திற்கு ஆகாததாக இருந்தால், அப்போதும் அதைச் செய்யலாமா ? கூடாது. உணவைப் போலவே, மற்றத் துறைகளிலும் கணவனுக்கு இயைந்து நடப்பது நல்லது. ஆனுல் குதிரைப் பந்தயம் அவருக்கு விருப்பமானதாக இருந்தால் என்ன செய்வது ? கிண்டி விளையாட்டால் உள்ளதெல்லாம் இழந்து ஓட்டாண்டியாகிக் குடும்பம் அழிவதைவிட, அவருடைய மனத்தை மகிழ்விக்காமல் நின்று வெறுப்பைத் தேடிக்கொள்வதே நல்லது அல்லவா ? அப்போதும் அவரைக் கிண்டிக்கு அனுப்பாதபடி அன்பால் அவர் மனத்தை மாற்றுதல் நல்லது ; முடியாதபோது அவருடைய வெறுப்பை வரவேற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றுவது கடமை அல்லவா ? இல்வாழ்க்கைக்காகப் பொறுமை ; ஆனுல் அந்தப் பொறுமையால் இல்வாழ்க்கை கெடுவதானுல்—? உடம்புக்காக உணவு ; அந்த உணவால் உடம்பு அழிவதானுல், பட்டினியைப் போற்ற வேண்டாமா ?

கிண்டி விளையாட்டு, தீமை மிகுந்த பெரிய குறை. அதற்காகப் போராட்டம் நல்லது. ஆனுல் பெரிய தீமை இல்லாத சிறு குறைகள் சில இருக்கலாம் ; அவற்ருல் அவ்வளவாகத் தீமை இல்லாதபோது போகட்டும் என்று விட்டுவிடலாம். கணவர் பொழுதுபோக்குக்காகச் சீட்டாட்டம் விரும்புகின்றவரானுல், அதற்காகப் போராட்டத்தைத் தொடங்கலாமா ? வாழ்வோர் ஒவ்வொருவரிடத்திலும் சிறு சிறு குறைகள் இருப்பது இயற்கை. அந்தச் சிறு குறைகளுள் சிலவற்றைத் திருத்த முடியும் ; சிலவற்றைத் திருத்த முடியாது. திருத்த முடியாத சிறு குறைகளைத் திருத்த முடியாதவை என்று தெளிவாக வைத்து

விடவேண்டும்; அவைகளைப் பற்றி எப்போதும் கவலைப் படக்கூடாது. உடம்பில் எழும் கட்டிகளை அறுத்தோ அறுக்காமலோ மருந்திட்டு ஆற்றவேண்டும். இல்லையானால் அவை உள்ளே குத்தலெடுத்துத் துன்பம் தந்துகொண் டிருக்கும். ஆனால் ஒரு துன்பமும் விளைக்காமல் உடம்பில் இடம்பெறுகின்ற மறு மச்சங்களைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

இப்படிப்பட்ட சிறு குறைகள் நம்மோடு பழகுவோ ரிடம் இருந்தால், அவை இயற்கை என்பதுபோல் விட்டு விட வேண்டும். விட்டுவிட வேண்டும் என்றே சொல் கின்றேன். அவற்றைப் பற்றி வேடிக்கையாகப் பேசுதலும் கூடாது. குறைகளைப் பற்றி வேடிக்கையாகப் பேசுதலும் தீமை விளைக்கின்றது. "யாகாவா ராயினும் நாகாக்க" என்ற திருவள்ளுவரின் பொய்யாமொழி நினைவுக்கு வரு கின்றது.

பிறர் உடம்பைப் புண்படுத்துவதற்கு உடல்வலி வேண் டும்; பிறர் மனத்தைப் புண்படுத்துவதற்கு ஒருவகை வலிமை யும் வேண்டியதில்லை. கோழையிலும் கோழையான ஒருவன்–மனவலிமையும் சொல்திறனும் இல்லாத ஒருவன்–மற்றவர் களின் மனத்தைப் புண்படுத்த முடிகின்றது. ஆகையால் நாவால் பிறர்குறையைப் பேசுவதில் விழிப்பாக இருக்க வேண்டும். ஒருவரைப் பற்றிக் குறை சொல்லவேண்டியிருந் தால், அன்பான சில சொற்களால் அவரிடமே அவர் தனி யாக இருக்கும் நேரத்தில் மட்டுமே சொல்லலாம். குறை யைச் சொல்லும்போது இவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது. உன்னோடு நெருங்கிப் பழகும் ஒருத்தியின் குறையை அவள் தனியாக இருக்கும்போது அவளிடமே சொல்; அவள்மனம் புண்படுவதில்லை. அதையே மற்றவர் கள் இருக்கும்போது அவளிடம் சொல்; உடனே அவள் மனம் புண்படுகின்றது. அவள் இல்லாதபோது மற்றவர்

களிடம் சொல்; அவள் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதும் மனம் மாறிப் பகை கொள்கிருள். ஒருத்தியைப் பற்றிய குறையே; ஒரே குறை; ஒரே வகையான சொற்களால் சொல்லப்பட்டது; ஒருவர் வாயாலேயே சொல்லப்பட்டது; ஒரே மனப்பான்மையோடு சொல்லப்பட்டது; ஆயினும் மூவகை நிலையில் மூவகையான பயன் விளைவதைக் காண லாம்.

என் நண்பன் ஒருவன்; உனக்குத் தெரிந்திருக்க முடியாது; அவனும் நானும் வெளியூரில் ஒரே இடத்தில் தொழில் செய்தபோது பழகினேம். அவனுக்கும் அவ னுடைய மனைவிக்கும் வாழ்க்கை கசந்துவந்தது. இருவரும் நல்லவர்கள்; அழகும் திறனும் வாய்ந்தவர்கள். என்ன குறை என்பது எனக்கு விளங்கவில்லை. மற்றப் பொருத் தம் எல்லாம் இருந்தும் மனப்பொருத்தம் ஒன்றுமட்டும் இல்லாமலிருந்தது. அது எனக்கு ஒரு புதிராக இருந்து வந்தது. விஞ்ஞானி ஒருவனுடைய மனநிலை எனக்கு வந்தது. எப்படியாவது காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று முனைந்தேன். அடிக்கடி வீட்டுக்குச் சென்று பழகினேன். வெளியே இருந்தபோது என்னிடம் மனைவியைப் பற்றிக் குறை சொன்னது போலவே, வீட்டுக் குச் சென்று பேசிக்கொண் டிருந்தபோதும் அவ்வாறே குறை சொல்லத் தொடங்கினுன். "வேண்டாம் அய்யா. உன் மனைவியின் காதில் இந்தப் பேச்சு விழும். கேட்டால் வருந்துவார்" என்று தடுத்தேன். "இது ஒன்றும் புதிது அல்ல; எங்களுக்குப் பழக்கம்" என்ருன். உடனே எனக்குக் காரணம் விளங்கிவிட்டது. மனைவியின் மனம் வருந்துமே என்ற உணர்வு சிறிதும் இல்லாமல், வருவார் போவாரிடத்திலும் உறவினரிடத்திலும் இப்படி அவ ளுடைய குறையைச் சொல்லிச் சொல்லி மனத்தைப் புண் படுத்திவிட்டான் என்று அறிந்துகொண்டேன். மறு

நாளே. அவனை ஒரு பூங்காவுக்கு அழைத்துச் சென்று, மனத்தின் தன்மையை அவனுக்கு விளக்கமாகச் சொன்னேன். ஆஸ்திரேலியாவைப் பற்றியும் அமெரிக்காவைப் பற்றியும் இமய மலையைப் பற்றியும் மிசிசிபியைப் பற்றியும் எக்ஸ்ரேவைப் பற்றியும் அணுக்குண்டைப் பற்றியும் அறியும் அறிவால் இல்வாழ்க்கையைச் செம்மையாக நடத்த முடியாது என்றும், மனத்தைப் பற்றி அறிந்து ஒழுகினால்தான் சீராக நடத்த முடியும் என்றும் விளக்கினேன். மற்றப் பொருத்தங்களைவிட மனப்பொருத்தமே முதன்மையானது என்றேன். நண்பன் மனம் நெகிழும் நேரம் பார்த்து, " இனி ஒரு நோன்பு வைத்துக் கொள். உன் மனைவியைப் பற்றித் தனியாக அவளிடம் தவிர, வேறு யாரிடமும் யார்முன்னிலையிலும் குறை சொல்லாதே. உன் தாய் அவள்தாய் உன் நண்பன் அவள் தோழி என்ற யாராக இருந்தாலும் அவளைப் பற்றிய குறையை யாரிடமும் எப்போதும் சொல்லாதே. இந்த நோன்பு ஒன்று போதும். ஆறு மாதம் கழித்துப் பயன் சொல் " என்றேன்.

நண்பன் வாய் திறக்காமல் விடைபெற்றான். என் பேச்சு அவனுடைய உள்ளத்தைத் தொட்டுவிட்டது என அறிந்துகொண்டேன். விளைவை ஆராய்ந்துவந்தேன். ஒரு மாதம் கழித்துக்கேட்டேன். " யாரிடமும் சொல்லக் கூடாது என்றாயே. உன்னிடம் மட்டும் குறை சொல்வேணு?" என்று சிரித்தான். " நல்லதுதான் " என்று விட்டுவிட்டேன். ஆறுமாதம் கழித்துப் பொங்கல் விழா வந்தது. வீட்டுக்கு விருந்தினனாக வருமாறு அன்போடு அழைத்தான். அந்தத் தமிழ்விருந்தை உண்டுகொண்டிருந்தபோது, " உன்னால் எங்கள் வாழ்க்கை சீர்ப்பட்டது அய்யா " என்று முகம் மலர்ந்து அகம் உருகிச் சொன்னான். பரிமாறிக்கொண் டிருந்த முகத்தைப் பார்த்தேன். புன்

முறுவல் அரும்பியிருந்தது. "எல்லாம் குறள்நெறி" என்று சொல்லி வேறு பேச்சுப் பேசத் தொடங்கினேன்.

பிறர்மனத்தை உன் நாக்கால் புண்படுத்தாதே என்பதற்காக இதை எழுதினேன். ஆனால் பிறர்நாக்கு உன் மனத்தைப் புண்படுத்தாதபடி வல்லமையோடு வாழக் கற்றுக்கொள். இதற்குத் தனிக் கேடயம் வேண்டியதில்லை. பிறர் உன்னை நோக்கி வீசும் சொற்களைத் தடுக்க எந்தக் கருவியும் பயன்படாது. ஒரே ஒரு தெளிவுமட்டும் இருந்தால் போதும். பிறர் எறியும் கல்லோ கருவியோ உடம்பைத் தாக்கியே தீரும். உடம்பு அப்படிப்பட்டது. ஆனால் பிறர் எறியும் சொல் அப்படிப்பட்டது அல்ல; நம் மனம் மெலிந்து நின்றால்தானே அந்தச் சொல் தாக்கும்? நம் மனம் வலிமையோடு இருந்துவிட்டால், அந்தச் சொல் ஒலியாய்க் கரைந்துபோகும். ஒருத்தி உன்னைப் பார்த்து, "நீ அறிவில்லாத முட்டாள்" என்று பழிப்பதாக வைத்துக்கொள். அதனால் உன் 'அறிவில் எள்ளளவாவது குறைந்துபோகுமா? இளமைநிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகின்றது. ஒருநாள் தம்பியோடு முரண்பட்டு வம்பு வளர்த்து, 'கழுதை' 'குரங்கு' என வைது அனுப்பினேன். அவன் அழுதுகொண்டே அப்பாவிடம் போய் முறையிட்டான். அப்பா அவனைப் பக்கத்தில் அணைத்துக்கொண்டே, அவனுடைய பின்புறத்தைத் தடவி "எதோ எழில்! இன்னும் வால் முளைக்கவில்லையே. கழுதையின் வால் குச்சிபோல் இருக்கும். அதுவும் இல்லை. குரங்கின் வால் நீளமாக இருக்கும். அதுவும் முளைக்கவில்லையே" என்றார். அதைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது. அப்பா வேடிக்கையாகப் பேசினார். உண்மை அதுதான். அதை இன்னும் மறக்கமுடியவில்லை. எவ்வளவு பெரிய உண்மை, பார்! பிறர் சொல்லும் சொல்லால் நம் மனம் புண்பட்டது என்றால், நம் மனத்தின் மெலிவே அதற்

குக் காரணம். சொல் ஒருவகை மாறுதலும் செய்யாது என்ற தெளிவு ஏற்பட்டால், மனம் வலிமை பெற்று விடுகிறது ; பிறர் கூறும் சொல் வெற்ருெலியாய்க் கரைந்து போகின்றது. பிறர்கை நம்மைத் தாக்கவல்லது. ஆனுல் நம் மனம் நம்மிடம் இருந்தால், பிறர்நாக்கு நம்மைத் தாக்க முடியாது.

ஆகையால் மீண்டும் குறிக்கின்றேன். உன் நாக்கால் பிறர்மனத்தைப் புண்படுத்தாதே ; பிறர்நாக்கு உன் மனத்தை ஒன்றும் செய்யாது என நம்பு.

உன் அன்புள்ள,

**வளவன்.**

# 8

அன்புள்ள தங்கை,

கணவன் மனைவி என்று இருவர் மட்டும் வெளியார் தொடர்பு ஒன்றும் இல்லாமலே வாழ்வதாக இருந்தால் ஒரு தொல்லையும் இருக்காது என்றும், வெளியுலகத்தில் எப்படியும் ஈடுபட்டுப் பழகவேண்டி யிருப்பதால்தான் தொல்லைகள் விளைகின்றன என்றும் எழுதியிருக்கிறாய்.

அப்படி உலக அமைப்பு இதுவரையில் இருந்ததா? இனியேனும் இருக்க முடியுமா? முடியாது. முனிவர்கள் போல் மலையோரத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு வாழ்வதானாலும் அங்கும் வெளியார் யாராவது நிழல் தேடித் தங்க வந்துவிடுவார்கள்; சிலர் மன அமைதி தேடிச் சீடராக வந்துவிடுவார்கள். சிறை போன்ற வீடு ஒன்றை அமைத்துக்கொண்டு வாழ்வதானாலும், காவலாட்கள் சிலர் தேவையாக இருப்பர்; அவர்கள்வாயிலாக வெளியுலகத் தொடர்பு ஏற்பட்டுவிடும். அது வீண் கனவு.

வெளியுலகத் தொடர்பு பலவாறு வைத்துக்கொண்டே நல்ல இல்வாழ்க்கை நடத்தமுடியும் என்பது என் நம்பிக்கை. ஆனால் வெளியுலகம் எப்படி இருந்தாலும், குடும்பத்தின் இருவர் மனம் பொருந்தி வாழ வேண்டும். இந்தப் பொருத்தம் இருந்தால், வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டு எப்படியும் வாழ முடியும்.

பலர்வாழ்க்கை வெளியாரின் தலையீட்டால் கெடுகின்றது என்பதை ஒப்புக்கொள்கிறேன். வெளியார்மேல்மட்டும் குறை சொன்னால் போதாது. அந்தக் குடும்பத்தார்மேலும் குறை உள்ளது.

என்ன குறை என்று கேட்கலாம். நெருக்கடி நேரும் போது எப்படி நடந்துகொள்வது என்று தெரியாத குறை;

எது முதன்மையானதோ அதைப் போற்றி மற்றவற்றைக் கைவிடத் தெரியாத குறைதான்.

நெருக்கடிகள் வாழ்க்கையில் நேர்வது இயற்கை. அப்போதுதான் அறிவும் திறனும் பயன்படவேண்டும்.

வீடு தீப்பற்றி எரியும்போது, எதை முதலில் எடுத்துக் காக்கவேண்டும் என்ற அறிவு எல்லோருக்கும் இயற்கையாக உள்ளது. கந்தலையும் குப்பையையும் துடைப்பத்தையும் முறத்தையும் அப்போது யாரும் எடுத்துச் செல்வதில்லை. பெட்டியையும் பேழையையும் முதலில் எடுத்துக் காக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியும் வாய்ப்பு இருந்தால் துணிமணிகளையும் உணவுப் பொருள்களையும் எடுக்கிறார்கள். சிறந்தது இது, ஆகையால் இதை முன்னே எடுக்க வேண்டும் என்ற தெளிவு இயற்கையாக இருக்கிறது. சிறப்பு இல்லாதது இது, ஆகையால் எரிந்துபோனால் போகட்டும் என்ற துணிவுமனப்பான்மையும் இருக்கிறது.

இது புறத்தே நேரும் நெருக்கடி. அகத்தே – உள்ளத்தில் – நெருக்கடி நேரும்போது இவ்வாறு நடந்துகொள்ள வல்லவர்கள் எப்போதும் எந்தத் துறையிலும் வெற்றிபெற முடியும். எதை எதை விடாமல் போற்றுவது என்றும், எதை எதைக் கைவிடத் துணிவது என்றும் தெளிவாக உணர்ந்து நடக்க வேண்டும்.

தேர்வுக்குப் படிக்கும் மாணவன், தேர்வு நெருக்கத்தில் பாட நூல்கள் முதன்மையானவை என்று உணர்ந்து மற்றவற்றைக் கைவிடத் துணியாவிட்டால் பயன் என்ன ? கலையில் ஈடுபட்ட கலைஞன் தன் கலைத்துறைக்கு உரியவற்றைப் போற்றுவதோடு, நெருக்கடியில் மற்றவற்றை மறக்காவிட்டால் பயன் என்ன ? நாட்டுத் தொண்டில் ஈடுபட்ட ஒருவன் நெருக்கடி நேரும்போது தன் மனைவிமக்களையும் எதிர்காலத்தையும் பொருட்படுத்தாமல் தள்ளிவைக்கத் துணியாவிட்டால் பயன் என்ன ?

" கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை " என்று நாட்டுப் புறத்துப் பழமொழி ஒன்று உள்ளது. இதை நினைத்தும் அதை நினைத்தும் நெருக்கடி நேரத்தில் தயங்குவதால் பயன் இல்லை. கூழ்தான் முக்கியம், மீசையைப் பிறகு ஒழுங்கு படுத்திக்கொள்வோம் என்று அப்போதைக்கு ஒன்றை ஒதுக்கத் துணிய வேண்டும். ஏழெட்டு நிலைகள் ஆசையூட் டும்போதும் எது முதன்மையானது, எது இரண்டாவது, எது மூன்றாவது, எது நான்காவது, எது ஐந்தாவது, எது ஆறாவது என இப்படியே பலவற்றையும் முறைப்படுத்தி வைத்துக்கொண்டு, உயர்ந்ததற்காக மற்றதைத் துறக்கத் துணியவேண்டும். மூன்றாவதன் பொருட்டுப் போராட்டம் வரும்போது, நான்காவது ஐந்தாவது முதலியவற்றைக் கைவிடுவது திறமையான போக்கு. ஆனால் மூன்றாவதற் கும் முதலாவதற்கும் போராட்டம் நேரும்போது மூன்றா வதைக் கைவிடுவதே கடமை.

கணவனோடு வாழும் ஒருத்திக்குக் கணவனுடைய அன்பே முதன்மையானது; மக்கள் இரண்டாம் நிலை யினர்; கணவன்பெற்றோரும் தன் பெற்றோரும் மூன்றாம் நிலையினர்; நண்பரும் உறவினரும் நான்காம் நிலையினர்; புகழும் மதிப்பும் ஐந்தாம் நிலையின; கலையும் பொழுது போக்கும் ஆறாம் நிலையின; தெருவாரும் ஊராரும் ஏழாம் நிலையினர்; இப்படியே மற்றவற்றையும் மற்றவர்களையும் முறைப்படுத்தி வைத்துக்கொள்ளலாம். பெற்றோரைக் காப்பாற்றும் கடமை முன்நிற்கும்போது, கலை பொழுது போக்கு முதலியவற்றைக் கைவிடத் துணியவேண்டும்; புகழ் மதிப்பு முதலியவற்றைப் பொருட்படுத்திக் கணவ னுடைய வெறுப்பைப் தேடிக்கொள்ளக்கூடாது. இப் படியே எந்த நெருக்கடி நேரும்போதும் கண்ணை மூடித் துணியும் துணிவு வேண்டும். ஆனால் துணிவுக்கு முன்ன தாகவே நெஞ்சில் தெளிவு வேண்டும். கணவனுக்கும் இது

போலவே தெளிவும் துணிவும் இருக்க வேண்டும். இல்லை யானல், ஏதேனும் ஒரு நெருக்கடி நேர்ந்து வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடும்.

காந்தியடிகள் இந்த நாட்டில் எவ்வளவு பெரிய போராட்டம் எத்தனை முறை நடத்தியிருக்கிறார்! வரலாற்றில் அதற்கு இணை இல்லை. ஆயினும் எவ்வளவு தெளிவும் துணிவும் அவருக்கு இருந்தன. சத்தியத்திற்காக அஹிம்ஸைக்காக நாட்டின் விடுதலையையும் பொருட்படுத்தாதிருக்கத் துணிந்த நெருக்கடிகள் பல; நாட்டின் விடுதலைக்காகத் தம் அமைதியையும் குடும்ப நன்மையையும் கைவிடத் துணிந்த நெருக்கடிகள் பல. இப்படி எத்தனையோ நெருக்கடிகள் கண்டு, உடனுக்குடன் துணிந்து செயலாற்றிய வீரருள் வீரர் அவர்.

கணவனும் மனைவியுமாக வாழ்வோர் இந்தத் தெளிவும் துணிவும் பெற்றுவிட்டால், ஒருவர் மற்றொருவர்க்காகத் தியாகம் செய்யும் கலை இயல்பாக அமைந்துவிடும். அப்போது வெளியுலகம் அவர்களை என்ன செய்யமுடியும்?

வெளியுலகம் வேண்டாம் என்று வெறுக்காதே. வெறுக்கவும் முடியாது. நம் சிறு சிறு குடும்பங்கள் பரந்த பெரிய உலகக் குடும்பத்தில் உறுப்புக்கள் தானே?

ஆனல், உயர்ந்த நோக்கத்துடன் வெளியுலகத் தொடர்பு கொள்ளவேண்டும்; மனம் கிணற்றுத் தவளையாய்க் குறுகாமல் வானம்பாடியாய் உயர்ந்து பறப்பதற்காக உலகப் பழக்கம் வேண்டும்.

மற்றவர்களுடன் பழகும் ஆண்கள் பலர்க்கு இந்த உயர்ந்த நோக்கம் இல்லை. ஆண்கள் கூடிப் பேசும்போது இந்தப் பெண்ணைப் பற்றியும் அந்தப் பெண்ணைப் பற்றியும் இந்தக் கொலை பற்றியும் அந்தக் காட்சி பற்றியும் இந்த வம்பு பற்றியும் அந்த வாதம் பற்றியும் பேசிக் காலம் கழிக்கிறார்கள். பெண்கள் கூடிப் பேசும்போது, இந்தக்

குழம்பு பற்றியும் அந்தக் கறி பற்றியும் இந்தப் புடைவை பற்றியும் அந்த நகை பற்றியும் இந்தச் சடங்கு பற்றியும் அந்தச் சண்டை பற்றியும் ஓயாமல் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பழக்கத்தை எப்படிப் பரந்த பழக்கம் என்று சொல்ல முடியும்? திருவள்ளுவரின் அறத்தைப் பற்றியும் கண்ணகியின் தியாகத்தைப் பற்றியும் காந்தியடிகளின் வாய்மையைப்பற்றியும் கஸ்தூரிபாவின் உறுதியைப் பற்றியும் எளிய வாழ்வின் செம்மையைப் பற்றியும் இல்லறத்தின் அமைதியைப் பற்றியும் ஏழைகளின் முன்னேற்றத்தைப் பற்றியும் உலக ஒருமைப்பாட்டைப் பற்றியும் பேசும் போக்கு எங்கே உள்ளது? இவைகளை எல்லாம் சில ஆண்டுவிழா மேடைகளுக்கு என்றே ஒதுக்கிவிட்டார்கள் போல் தெரிகிறது.

படித்தவர்களோடு மட்டும் பழகு என்று வரையறுக்கவும் விரும்பவில்லை. ஏன் என்றால், பரீட்சைகளுக்குப் படித்தவர்கள் மிகுந்த காலம் இது. அறிவுவளர்ச்சிக்கு என்று படித்தவர்கள் சிலரே; நல்வாழ்வுக்கு என்று படித்தவர்களும் மிகமிகச் சிலர். ஆகவே, அறிவும் திறனும் ஒழுக்கமும் உள்ளவர்களோடு பழகு என்று ஒருவாறு கூற முயல்கிறேன்.

மற்றவர்களோடு பழகாதே என்று தடுக்கவில்லை. நெருங்கிப் பழகாதே என்று மட்டும் சொல்வேன். பல நூல்களைப் பற்றியும் தெரிந்துகொள் என்றும், சில நல்ல நூல்களை மட்டும் படி என்றும், மூன்று நான்கு உயர்ந்த நூல்களை மட்டும் படித்துக்கொண்டே இரு என்றும் படிக்க விரும்புகின்றவர்களுக்கு நான் சொல்வது உண்டு. மற்றவர்களோடு பழக விரும்பும்போது உனக்கும் அதைத்தான் சொல்வேன். பலரைப் பற்றியும் தெரிந்துகொள்; சிலரோடு மட்டும் பழகு; இருவர் மூவரோடு மட்டும் நெருங்கிய நட்புக்கொள்.

ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் புலவர் கண்டவரோடு எல்லாம் பழகிப் புதிய புதிய நட்புக்களைப் பெருக்கவேண்டாம் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார். அவர்காலத்தை விட நம் காலத்தில் பலரோடு நட்புக்கொள்வதற்கு வாய்ப்பு மிகுதி. இக்காலத்தில் போக்குவரவு வசதிகள் பெருகிவிட்டன. தபால் முதலிய அமைப்புக்கள் வளர்ந்துவிட்டன. நகரங்கள் பெரிய அளவில் அமைந்துள்ளன. நினைத்த நேரத்தில் வந்து போகும் பழக்கம் மிகுந்துவிட்டது. ஆகையால் நூற்றுக்கணக்கானவர்களோடு பழகி நட்பைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ள காலம் இது. இந்தக் காலத்தில் அவருடைய அறிவுரை மிகத் தேவையாகிவிட்டது. வாய்ப்புகளும் கருவிகளும் வளர்ந்திருக்கின்றன; ஆனால் மனிதனுடைய வாழ்நாள் வளரவில்லை என்பதையும், ஒருநாளில் இருபத்து நான்கு மணி நேரம் என்னும் பொழுது நீளவில்லை என்பதையும் எண்ணிப் பார்த்தால் இந்த உண்மை மேலும் தெளிவாய்ப் புலப்படும். ஆகையால் நண்பர் ஒரு சிலர்க்கு உரிய நேரமும் அன்பும் பலர்க்குப் பங்கிடப்பட்டால் என்ன ஆகும்? உள்ளம் கலக்காத போலி நட்பு வளரும். குடும்பத்தில் வேலை மிகும்; அலைச்சலாலும் ஓய்வின்மையாலும் 'எரிச்சல்மனம்' என்ற நோய் தொடரும்; குழந்தைகள் மேல் வெறுப்பு, சீறிவிழுதல், போலீஸ் ஆட்சி, இராணுவத் தண்டனை எல்லாம் குடும்பத்துள் புகும். கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமை சுமை போல் தோன்றும்; அதில் குறை பல நேரும். அமைதிக் கோயிலாக விளங்கவேண்டிய குடும்பத்தில் பரபரப்பு மிகுந்துவிடும். வெளியுலகத் தொல்லைகளுக்கு விடுதலையாக வீடு இருந்த நிலைபோய், குடும்பத் தொல்லைகளுக்கு விடுதலையாக எங்கேனும் ஓடி ஒளியும் வேட்கை எழும். ஏன் இவ்வளவு துன்பம்? நாமே வலை விரித்து நாமே சிக்குண்டு வருந்துவதோ?

மனம் கிணற்றுத் தவளையாய்த் தாழாமல் வானம்பாடியாய் உயர்வதற்குப் பரந்த உலகப் பழக்கம் வேண்டும் என்று குறிப்பிட்டேன். ஆனால் அந்தப் பரந்த உலகத்தை வீட்டினுள் வருவித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை; உன் மனத்தினுள் வைத்துக்கொள் என்று சொல்கிறேன். அதாவது: அனுபவிக்கும் இன்பதுன்பம் எதையும் உலகத்தோடு, உலகப் படைப்போடு எண்ணி இயைத்துப்பார். நடைபெறும் நிகழ்ச்சிகளை உலக வரலாற்றோடு இயைத்து எண்ணிப்பார். காணும் சுற்றுப்புறத்தைக் காவியங்களில் உள்ள கற்பனையுலகத்தோடு ஒப்பிட்டுக் கருதிப்பார். இன்று உள்ள இந்தச் சிறு வாழ்க்கை, என்றும் உள்ள கடவுள்தன்மையாகிய கடலில் ஒரு துளி என்று உணர்ந்துபார். இவ்வாறு எண்ணுவதாலும் கருதுவதாலும் உணர்வதாலுமே உண்மையான பரந்த உலகப் பழக்கம் மனத்திற்கு ஏற்படும். அப்போதுதான், புள்ளிபோல் உள்ள மனம் சிறு வட்டம் போல் வளர்ந்து, பெரிய வட்டம்போல் பெருகி உலகை எல்லாம் வளைத்துக் கொள்ளும் பெருமனம் ஆகும். அதனால் எவ்வளவோ நன்மை விளையும். நம் தனிவாழ்க்கையில் நேரும் சிறுசிறு துன்பங்கள் எளிதில் கரைந்து போகும். சில்லறை இன்பங்களை நாடி அலையும் அலைவு இல்லாமல் ஒழியும். அப்போதுதான் வீண் பேச்சுக்களில் சுவை தோன்றாது. கண்டதற்கெல்லாம் மனம் தடுமாறாது. கேட்டதற்கெல்லாம் எரிச்சல் கொள்ளாது. பொறுமையும் பெருந்தன்மையும் இயல்பாக அமையும். அப்போதுதான் கண்ணகி முதல் கஸ்தூரிபா வரையில் மணிமேகலை முதல் மாண்டிசோரி வரையில் உள்ள பெண்மணிகளின் பெருமை விளங்கும்.

சிலர் இப்படிப்பட்ட சான்றோரின் வாழ்க்கைவரலாறுகளைப் படிக்கும்போது மட்டும் நல்ல மனம் உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் காவியங்களைப் படிக்கும்

போது மட்டும் இளகிய நெஞ்சம் உடையவர்களாய் உணர்ந்து உருகிக் கண்ணீரும் விடுகிறார்கள். சிலர் பிறர்க்கு அறத்தின் பெருமையை எடுத்துரைக்கும்போது மட்டும் நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலர் கடவுளும் தாமுமாகப் பூசையறையிலும் கோயிலிலும் இருக்கும் போதுமட்டும் நல்லவர்களாக விளங்குகிறார்கள். ஆனால் தம்மைச் சுற்றி வாழும் மக்களைப் பார்க்கும் பார்வையிலும் அவர்களோடு பழகும் பழக்கத்திலும் அப்படி இல்லை. சிலர் சுடுகாட்டில் மட்டும் நல்ல மனம் பெற்று உண்மைகளை உணர்ந்து உருகவில்லையா? அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களே இவர்களும். அதனால்தான், கணவன்மார் சிலரும் மனைவியர் சிலரும் தம் தம் குடும்ப வாழ்க்கையில் நல்லவர்களாக இல்லை; ஆனால் அயலாரிடத்தில், நண்பர்களிடத்தில், நல்லவர்களாக இருக்கிறார்கள்; ஊரார்க்கும் உலகத்தார்க்கும் உபதேசம் செய்யும்போது நல்லவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், உலகப் படைப்பை மட்டும் அறிதலும், உலக வரலாற்றை மட்டும் படித்தலும், காவியங்களை மட்டும் கற்றலும், கடவுளை மட்டும் பூசித்தலும் இருந்து விட்டால் பரந்த நோக்கம் வந்துவிடாது. ஏழைகளின் முன்னேற்றத்தை எண்ணவேண்டும்; சுற்றுப்புறம் சீர்பெற வழி கோல வேண்டும்; ஆடம்பர மோகத்தை அகற்ற வேண்டும்; தம் குறையைத் தாமே உணரவேண்டும்; மேற் சொன்னவற்றோடு இந்த நான்கும் பொருந்தினால்தான், குறுகிய நோக்கம் ஒழிந்து உயர்ந்த வாழ்வு அமையும். விவேகாநந்தரின் வாழ்வையும் காந்தியடிகளின் வாழ்வையும் ஆராய்ந்துபார்.

உன் அண்ணி சொன்னது ஒன்று நினைவுக்கு வருகின்றது. அவளுக்குத் தெரிந்த ஒரு குடும்பத்துச் செய்தி அது. ஒருகால் உனக்கும் தெரிந்திருக்கலாம். அந்தக்

குடும்பத்தில் மனைவியிடம் பல குறைகள் இருக்கின்றன வாம். தன்னலம், ஆடம்பர வேட்கை, கடமை தவறல், உணர்ச்சிமிகுதி, பதற்றப் பேச்சு முதலான பல குறைகள் உண்டு; அதனால் கணவன் அவளை விரும்பி நடப்பதில்லை யாம்; அன்பான வாழ்க்கை இல்லையாம். அவளுக்கு யாராவது அறிவுரை சொன்னாலும் சினம் கொள்வாளாம். ஆனால் நாள்தோறும் கடவுள்வழிபாடு செய்து உருகி உருகி வேண்டிக்கொள்வாளாம்; கோயில்களில் பல தெய்வங்களுக்கு வேண்டுதல் செய்துகொள்வாளாம். என்ன வேண்டுகோள், தெரியுமா? கணவனுடைய மனம் மாறித் தன்னிடம் அன்போடு வாழவேண்டும் என்று திரும்பத் திரும்ப வேண்டிக்கொள்வாளாம். பாவம்! பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் வாழ்க்கையில் அமைதி யும் இன்பமும் காணவில்லையாம். தன் குறை உணர்ந்து தன் மனம் திருந்தவேண்டும் என்று வேண்டிக்கொண் டிருந்தால், தன்னைத்தான் திருத்திக்கொள்ளும் ஆற்றல் ஏற்பட்டிருக்கும். நோய் தீரவேண்டும் என்னும் ஆசை இருக்கிறது. ஆனால் தக்க உணவு கொள்ளாமல் – பத்தியம் இருக்காமல் – மருந்து மட்டும் உண்பதால் பயன் என்ன?

உன் அன்புள்ள,

வளவன்